# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா

Registered as Newspaper

சுடர் :35 கதிர் :14 கார்த்திகை 25ஆம் நாள் புதன்கிழமை 11 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050







முச்சந்தி முரளி



" உந்தக் கண்ணீர்ச் சாபங்களெல்லாம் சும்மா விடாது கண்டியளோ...!"

# உறவுகள் எங்கே?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது கண்ணீரில் நனைந்தது வடக்கு



படம்: கம்சன்

யாழ்ப்பாணம், டிசெம்பர்11

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. 25

## கமாலுக்கு எதிராக கடும் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.11

பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவுக்கு எதிராக போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் எனும் அமைப்பு.

இந்த அமைப்பு100 பக்கங்களைக் கொண்ட 25

## இடியன் சூட்டில் இளைஞர் படுகாயம்

முல்லைத்தீவு, டிசெ.11

முல்லைத்தீவு, மல்லாவியில் நேற்று அதிகாலை இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

மல்லாவி, மங்கை குடியிருப்பைச் சேர்ந்த சபேசன் (வயது -25) என்ற இளைஞனே காயமடைந்துள்ளார்.

இவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது இனந்தெரி 25

## மேலதிக மாவட்ட செயலர்களுக்கு இடமாற்றல்

வவுனியா, டிசெ.11

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் மேலதிக செயலர்களுக்கு நாளை முதல் நடைமுறைக்குவரும் வகையில் இடமாற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றல்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது மேலதிக செயல 25

## ஓ/எல் மாணவன் விபத்தில் சாவு

வவுனியா, டிசெ.11

வவுனியா, சிதம்பரபுரம் ஆசிக்குளத்தில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடந்த விபத்தில் 16 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா ஆச்சிபுரத்தைச் சேர்ந்த புண்ணியகுமார் பகிரதன் (வயது-16) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். இவர் தற்போது நடைபெற்று வரும் 05

## சுமந்திரனுக்கு வைரஸ் காய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 25

## வடக்குக்கு சிங்கள ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெ.11

வடக்கு மாகாணத்துக்கு பெரும்பான்மையின ஆளுநர் ஒருவரே நியமிக்கப்படவுள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் 25

## சிறுமியை வன்புணர்ந்தோர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.11

சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்கள் நேற்றுச் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர். 25




போரால் பாதிக்கப்பட்டு கோப்பாயிலுள்ள பெண்களுக்கு

# இயற்கை உணவுகளை விற்க கடைத்தொகுதி

*7 நாள்களுள் விண்ணப்பிக்கவேண்டும்*

யாழ்ப்பாணம், டிசெ. 11

கோப்பாயில் இயற்கை உணவுப் பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கோப்பாயில் வசிக்கும் போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதில் வியாபார முயற்சிகளில் ஈடுபட முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பியுங்கள் என்று வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப்பாய் சந்தைக் கட்டடத் தொகுதியில் ஒன்பது கடைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் பகிரங்கக் கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் சலுகைகளுடன் கூடியதாக போரால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளவர்களிடம் இருந்தே முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன. இயற்கை மற்றும் உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருள்களைச் சந்தைப்படுத்த ஆற்றலும் ஆர்வமும் உடைய, வசதிகுறைவான வலி.கிழக்கு பிரதேச சபை ஆட்சிக்குட்பட்ட பகுதியில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முன்னாள் போராளிகள் மற்றும் போரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களைச் சேர்ந்தோர், அரசியல் கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தோர், போரில் குடும்ப உறுப்பினர்களை இழந்தோர் ஆகிய வகைப்பாட்டிலுள்ளவர்களில் தெரிவு செய்யப்படும் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு கடைத் தொகுதியில் வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வலிகாமம் கிழக்கில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள் வசிக்கின்றன. என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார். (த)

# வன்முறைச் சம்பவங்களால் இன, மதங்களிடையே விரிசல்

## மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம், டிசெ. 11*

அண்மைக்கால வன்முறைச் சம்பவங்கள் காரணமாக இனங்களுக்கும் மதங்களுக்குமிடையே விரிசல்கள் அதிகரித்துள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.



பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் சரஸ்வதி மண்டபத்தில் நேற்றுச் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு மனித உரிமைகள் தினம் 1950ஆம் ஆண்டில் இருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கௌரவம், சுதந்திரம், சமத்துவம் போன்ற விடயங்களில் மனிதனின் வாழ்வுரிமை தங்கியுள்ளது. இளைஞர்கள் மனித உரிமைக்காக எழுந்து நிக்கிறார்கள் என்ற கருப்பொருளில் இந்த முறை மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

போருக்குப் பின்னரும் எமது இனம், மதங்களுக்கு இடையே ஒற்றுமை இல்லை. ஒரு இனத்தை அல்லது மதத்தை மற்றுமொரு சமூகம் காயப்படுத்தும் பல்வேறு செயற்பாடுகள் இலங்கையில் நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் 21 சம்பவத்துக்குப் பின்னர் இனங்களுக்கிடையே விரிசல் சற்று அதிகரித்துள்ளது. ஆகவே இந்த முறை வெறுப்புப் பேச்சுக்கு எதிராக நாம் எவ்வாறு செயற்படுவது என்பதை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் தினம் அமைந்துள்ளது.

இதற்கு ஏற்ற வகையில் இளைஞர்களை எவ்வாறு தயார் செய்வது என்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சமூக வலைத் தளங்கள் ஊடாக வெறுப்பு பேச்சுக்கள் பகிரப்படுவதால் பதியப்படுவதால் அதிக விளைவுகள் ஏற்படுகின்றன. கடுமையான சூழ்நிலை நிலவினால் அரசு சமூக வலைத்தளங்களை முடக்குகின்றது. இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலவினால்தான் நாட்டில் மனித உரிமையைக் கட்டியெழுப்ப முடியும்.

வெறுக்கத்தக்க பேச்சுகளுக்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது மற்றும் அது தொடர்பாக எவ்வாறு வழிகாட்டல் செய்ய முடியும் என்பது தொடர்பாக அரசுக்கு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம். பொலிஸ் திணைக்களம் ,சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இது பற்றி பரிந்துரை செய்துள்ளோம். வடக்கு மாகா ணத்திலும் இவ்வாறு வெறுக்க தக்க சம்பவங்கள் நடைபெற்று நீதிமன்று வரை சென்றுள்ளன. மயானங்கள் தொடர்பில் வெறுக்கத்தக்க பேச்சு நடைபெற்று எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது - என்றார் .

நிகழ்வில் மதத் தலைவர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். (த-7)

# இராணுவ ஆட்சி

## அரசு முயற்சிக்கிறது ஐ.தே.க. கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11



புதிய அரசு இராணுவ ஆட்சிக்கு இணையான கடுமையான நிர்வாகத்துக்குத் தேவையான அடித்தளத்தை உருவாக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச கட்டமைப்பில் உள்ள பிரதான பதவிகளுக்கு சிவில் சேவையில் ஈடுபட்டுள்ள துறைசார்ந்த நிபுணர்களுக்கு பதிலாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளதன் மூலம் இது தெளிவாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரச பொறிமுறைக்குள், அரச கட்டமைப்புக்குள் பல பெரிய மாற்றங்களை செய்து வருகின்றனர்.

பிரதான பதவிகளுக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமையே நாங்கள் காணும் பிரதான மாற்றமாகும். துறைசார்ந்த சிவில் சேவையின் நிபுணர்கள், சிறப்பு இயலுமை உள்ளவர்களை ஒதுக்கி விட்டு, இராணுவமயமான மனநிலை கொண்ட இராணுவ பிரதானிகளே பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தொகையான இராணுவத் தலைவர்களை வேட்பாளர்களாக நிறுத்தி, அவர்களை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்து, தாம் விரும்பும் இராணுவப் பயங்கரவாதம் நோக்கி கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

அடுத்த பொதுத் தேர்தலில்

# ரணில் தலைமையில் ஐ.தே.க. போட்டியிடும்

கொழும்பு,டிசெ.11

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சி தலைமையகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில், கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றம் மீண்டும் கூடும் போது, எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்ட பின்னர் கட்சியின் தலைமைத்துவத்திலும் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவதில் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.11

தவறான முடிவெடுப்பவர்களை தடுக்கும் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வரும் சிறிலங்கா சுமித்ரயோ அமைப்பின் யாழ்ப்பாணக் கிளையாகிய கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த தொண்டர்களின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்வியங்காட்டில் அமைந்துள்ள சங்கிலியன் மன்றத்தில் நடைபெறும். (க)

# ஒருநாளில் 668 வீடுகளில் சோதனை

யாழ்ப்பாணம்,டிசெ 11

யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை மட்டும் 668 வீடுகளில் முன்னெடுக்கப்பட்டன.

டெங்கின் தாக்கம் அதிகம் காணப்படும் இடங்களை உள்ளடக்கியதாக இந்த நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக மாநகர சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை, அரியாலை, நல்லூர், யாழ்ப்பாண நகர்,

குருநகர், வண்ணார்பண்ணை, நாவாந்துறை ஆகிய இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையின் போது ஏழு குடியிருப்புக்களில் நுளம்பு குடம்பிகள் இனங்காணப்பட்டன.

அந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 37 வரையான குடியிருப்புக்கள் போதிய சுகாதார வசதிகள் இன்றி காணப்பட்டன.

இந்தக் குடியிருப்புக்களை உடனடியாக துப்புரவு செய்யுமாறு கோரிசிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-17)

# நாங்கள் செய்த தவறு

## தமிழர் வாக்களிக்காமைக்குக் காரணம் என்ன? கூறுகிறார் மஹிந்தவின் இளையமகன்




கொழும்பு, டிசெ. 11

வடக்கில் எங்களுக்கு யாரும் வாக்களிக்கவில்லை. அது வடக்கு மக்களின் தவறல்ல. அது நாங்கள் செய்த தவறு தான். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், பிரதமருமான மஹிந்த வின் இளையமகன் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்களத் தொலைக்காட்சி நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

'வடக்கில் எங்களுக்கு யாரும் வாக்களிக்கவில்லை. அது வடக்கு மக்களின் தவறு அல்ல. அது நாங்கள் செய்த தவறுதான். வடக்கில் வாழும் மக்களின் அவசியத்தை அடையாளம் காணவில்லை. நாங்கள் அந்த அவசியத்தை அறிந்து கொள்ள வேண்டும். அந்த மக்களின் மனங்களை வெல்ல நாம் என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட வேண்டும். தமிழ் மக்களால் எங்களுக்குப் பயன் இல்லை என்று சிந்திக்கும் அரசியல் மன நிலையே உள்ளது. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல இணைந்து செயற்பட வேண்டும். அவர்களைப் பிரிக்கக் கூடாது. அவர்கள் தமிழர்கள், சஜித்தின் மக்கள் என்று பிரிக்கக் கூடாது. உதாரணமாக நான் றக்பி விளையாடுகிறேன். விளையாடும் போது என்னுடன் விளையாடும் நபர்கள் முஸ்லிமா, தமிழரா, பறங்கியரா என்று பார்ப்பதில்லை. என்னை எதிர்த்து விளையாடும் நபர் யார் என்று பார்ப்பதில்லை. அது விளையாட்டு. இதனால், நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் எந்த வேற்றுமையையும் பார்க்கக் கூடாது.

அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும். அனைவரும் இலங்கை மக்கள் தமிழர்களும் நாட்டின் மக்கள், அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதன் மூலம் சிறப்பான நாடு ஒன்றை உருவாக்க முடியும்' என்றார். (ஓ.5)

# கூட்டமைப்பின் கூட்டம் 17க்குப் பின்னகர்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிக் கட்சிகளிடையேயான கூட்டம் நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், திட்டமிட்டவாறு அது நடைபெறவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்றுக் கொழும்பில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 3 கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவிருந்தனர்.

எனினும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா சுகவீனம் காரணமாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. இரு கட்சிகளுடன் மட்டும் இந்த விடயத்தை ஆராய்வது பொருத்தமற்றது என்பதால், இந்த விடயத்தை எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடுவது என்று ஏனையோர் தீர்மானித்தனர் என்று அறிய முடிந்தது. (எ-105)

# தேர்தலில் இலக்கின்றி போட்டியிட்டால் ஆப்பு

## எச்சரிக்கின்றார் மஹிந்த

கொழும்பு,டிசெ.11

இலக்கின்றி தேர்தலில் போட்டியிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பொதுத் தேர்தலிலும், மாகாணசபைத் தேர்தலிலும் எவ்வித இலக்கும் இன்றி மறைமுகமாக பிறிதொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மறைமுகமாக பிறிதொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில், பெரும்பாலான வேட்பாளர்கள் செயற்பட்டனர் என்று ஆணைக்குழு இனங்கண்டதாக செய்திகள் வெளியாகின. அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இந்த நிலமை தொடருமா என்பது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அதேவேளை கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)



# அமுதசுரபியின் ஆற்றொணாத் துயர் பகிர்வு



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபையின் நிறுவுனர்களில் ஒருவரும்
சபையின் முன்னாள் பொருளாளரும்,
செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
அறங்காவலர் சபைத் தலைவரும்
சிறப்புமிகு சமய சமூகப்பணியாளருமான

**வாணிபதிலகம் திருவாளர்**

## நாகமுத்து காராளபிள்ளை

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த
துயரங்களை அனைவருடனும் பகிர்ந்து
கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு
எமது ஆறுதலைத் தெரிவித்து அமரரின்
ஆத்மசாந்திக்காக
**அன்னை ஸ்ரீ நாகபூஷணியம்மனைப்**
பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி !**

**நிர்வாகம்**
**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.**
**நயினாதீவு - 2**
**தொ.பே.இல. 021 321 3575**

(CS 29840)(04.17)

# மரண அறிவித்தல்



**திருமதி**

## சிவராஜேஸ்வரன் சிவராஜேஸ்வரி

சித்தன்கேணி செல்வஸ்தானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராஜேஸ்வரன் சிவராஜேஸ்வரி கடந்த **(09.12.2019)** திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜேஸ்வரனின் (முன்னாள் பங்காளர் Venture NoorWood) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம்-சரஸ்வதி தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- (முன்னாள் PWD Overseer - Ambagamuwa), மங்கையற்கரசி தம்பதியினரின் மூத்த மருமகளும், முத்துலட்சுமி (வதனி), காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சாந்தினி, காலஞ்சென்ற இரஞ்சனி, இந்திரன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இலங்கைநாதன்- (முன்னாள் சக்தி அன்கோ நாவலப்பிட்டி) நாகபூஷணி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, சிவானந்தன், சிவனேஸ்வரி- நவரட்ணம், சற்குணநாதன் (இளைப்பாறிய முகாமையாளர், Lake House), விஜயகுமாரி, காலஞ்சென்ற பரமநாதன் (முன்னாள் உரிமையாளர் நிறஞ்சனாஸ் Hard ware, நிறஞ்சனாஸ் Theater- சங்கானை, நாதன்ஸ் சினிமா- யாழ்ப்பாணம்), யசோதரா, காலஞ்சென்ற ஞானேஸ்வரி - கணேசலிங்கம் ஆகியோரின் அருமை சகோதரியும், இராஜ்குமார் (பிரத்தியேக கால்நடை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரமணி, காலஞ்சென்ற சபாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிருந்தா, ரஜித்தா, ஐங்கரன், அபினயா, மதீனா, அஸ்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் காலஞ்சென்ற செல்வலட்சுமி- சதாசிவம்பிள்ளை, காலஞ்சென்ற விஜயலட்சுமி- கந்தசாமி, அன்னலட்சுமி- சுந்தரலிங்கம், காலஞ்சென்ற Dr. ஸ்ரீராஜேஸ்வரன்- ராஜேஸ்வரி, ஜெயலட்சுமி- வைத்தியலிங்கம், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன்- சாரதாதேவி, காலஞ்சென்ற சோமேஸ்வரன் (Chief Librarian College Of Education) - வசந்தாதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(12.12.2019)** வியாழக்கிழமை முற்பகல் **9.00** மணியளவில் செல்வஸ்தான் சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செல்வஸ்தான், சித்தன்கேணி**

**தகவல்: குடும்பத்தினர்**
**மகன்- இந்திரன், மருமகன்- இராஜ்குமார்**

**077 069 0261**

C11934(16/17)

# 34வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

**வேந்தரின் பேருரைக்கான அழைப்பு**

**"Distribution of Authority and Co-existence of Ethnic Groups Under Monarchy - The Kandyan Kingdom (C.1474-1815)"**

**"முடியாட்சியில் அதிகாரப் பகிர்வும் இனங்களின் சகவாழ்வும் - கண்டி இராச்சியம்-(C.1474-1815)"**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்பிற்குரிய தகைசார் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் அவர்கள் வழங்கும் சிறப்புக்கருத்துரை**

**13.12.2019 (வெள்ளிக்கிழமை)- பி.ப 1.30 மணி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 34வது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும், சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை மற்றும் சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக வேந்தரின் பேருரை இடம் பெற இருக்கின்றது.

இப்பேருரையானது எதிர்வரும் 13ம் திகதி (வெள்ளிக்கிழமை)- பி.ப 1.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும். இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் மதிப்பிற்குரிய தகைசார் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் "Distribution of Authority and Co-existence of Ethnic Groups Under Monarchy (C.1474-1815)" ("முடியாட்சியில் அதிகாரப் பகிர்வும், இனங்களின் சகவாழ்வும் - கண்டி இராச்சியம்-(C.1474-1815)" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக பேராசிரியர் அவர்கள் கொண்டிருக்கும் புலைமைசார் மற்றும் ஆய்வு சார் கருத்துக்கள் யாழ்ப்பாண கல்விச்சமூகத்தினரினருக்கு குறிப்பாக பல்கலைக்கழக கல்விச்சமூகத்தினருக்கு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாக அமையப்பெறுவதனால், மேற்படி சிறப்புக்கருத்துரை வழங்கும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு ப்யன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவாளர்
09.12.2019.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர்**

## துரையப்பா மயில்வாகனம்

(ஓய்வு நிலை இ.மி.ச. ஊழியர்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16.11.1944 | 12.11.2019 |

கடந்த **12.11.2019** செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் துரையப்பா மயில்வாகனம் அவர்களின் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நாளை **(12.12.2019)** வியாழக்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**புகையிரதநிலைய வீதி.சுன்னாகம்.** **குடும்பத்தினர்**

CS29851(16/17)

# முதலாம் ஆண்டு நினைவாக

**அமரர் Dr.அம்பலவாணர் ரகுபதி**

**(MBBS(SL), MD(COL), MRCP(U.K)MRCPE)**

*பொது வைத்திய நிபுணர்,*
*ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை)*



**அன்னை மடியில்**
**13.11.1974**

**ஆண்டவன் அடியில்**
**11.12.2018**

அன்பு தவழும் புன்சிரிப்பு.....
அரவணைத்தழைக்கும் அக அழகு.....
அன்புடனும் அறத்துடனும் வாழ்ந்தீர்கள்...

பார்க்கண்ட பண்பாளன்.....
உலகம் போற்றும் உத்தமன்.....
உறங்காத சேவகன் குடும்பத்தின்
காப்பாளன்....

நாட்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள்
வருடமாகிப் போனாலும் ஆறவில்லை
எங்கள் துயரம்...

மண்ணில் மறைந்தாலும் எல்லோர்
நெஞ்சங்களிலும்
நீங்கள் நிலைத்திருப்பீர்கள்.....!
என் தங்கைக்கும், உங்கள் மூன்று
முத்துக்களுக்கும்
விண்ணிலிருந்து ஆசிகள் வழங்குவீர்கள்...

உங்கள் ஆத்மா ஆண்டவன் அடியில்
அமைதியடைய வேண்டுகின்றேன்....

ஓம் சாந்தி.! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி...!

CS20000(16/17)

**அன்புள்ள உங்கள் மைத்துனி**
**லோஜி அக்கா, திருமதி சிவலோஜினி கமலராஜன்,**
**(ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்)**

## வீடு வாடகைக்கு விடப்படும்

கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று (03 Bed Room) நாள், கிழமை, மாத, வருட வாடகைக்கு விடப்படும். வாகன தரிப்பிட வசதிகளும் உண்டு. (அரச அலுவலகங்கள், களஞ்சிய சாலைகள், தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்)

**077 613 9931, 071 011 0590**


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சேர்பொன். இராமநாதன் நினைவுப் பேருரை



**ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் பெண் ஆளுமைகள் (1900 – 1950)**

பேருரைவழங்குனர்

**கலாநிதி. செ. யோகராசா**
முன்னாள் மொழித்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்
கிழக்குப்பல்கலைக்கழகம்

12.12.2019 (வியாழக்கிழமை) பி.ப 3.00 மணி
இடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை



**நாட்டிய இலக்கண நூல்களில் சுவை பற்றிய குறிப்புகள் மற்றும் நாட்டியத்தில் அவற்றைக் கையாளுதல்**

பேருரைவழங்குனர்


**கலைமாமணி லட்சுமி இராமசுவாமி**
(வருகைதரு பேராசிரியர்) சென்னைப் பல்கலைக்கழகம்.
இயக்குனர் ஸ்ரீ முத்ராலயா.

13.12.2019 (வெள்ளிக்கிழமை) பி.ப 3.00 மணி
இடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் பூபாலசிங்கம் (பாலா)



ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பூபாலசிங்கம் (பாலா) நேற்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயபாலசிங்கம், தர்மபாலன், காந்திமலர், பானுமதி, காலஞ்சென்றவர்களான ஜீவமதி, நிர்மலதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லலிதா, சச்சிதானந்தம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2019) மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

383/20, நாவலர் லேன்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 13 .... 10 .... 1945

இறைவன் அடியில் 21 .... 11 .... 2018

CS29828(16/17)

அமரர் திருமதி
**விஜயலட்சுமி அம்பலவாணர்**
திதி: 11.12.2019



ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும்
நீங்காது உங்கள் நினைவு – எம்
நெஞ்சங்களைவிட்டு!

இல.60, மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

அகலா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

ஓ.எல்...

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுபவராவார்.

வவுனியாவில் இருந்து சிதம்பரபுரம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஆசிக்குளம் வீதி வளைவில் திரும்பியபோது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த மாணவர்கள் அதனுடன் மோதி விபத்துக்குள்ளா கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நடந்த பரீட்சையில் தோற்ற இருந்த நிலையில் ஒருவர் அடையாள அட்டையை வீட்டில் விட்டு விட்டு வந்தால் அதை எடுக்கச் சென்று திரும்பும்போதே இந்த விபத்து நடந்துள்ளது.


பகிரதன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த மற்றையவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஏ-110,222)

## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 04 . 1952



உதிர்வு 08 . 12 . 2019

### வல்லிபுரம் ஜெகநாதன் (இராசு)

**(மகாவிஸ்ணு கட்டடப்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்)**

யாழ்ப்பாணம் நாவலர் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெகநாதன் அவர்கள் கடந்த (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் அன்னலஷ்சுமி தம்பதி களின் அன்பு மகனும் முள்ளியவளையைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான அரியகுட்டி திலகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தகுமாரியின் அன்புக்கணவரும் நிறஞ்சனா, நிறஞ்சன், நிஷாந்தனா, சுஜிவன், அஜந்தன், பார்த்திபா, ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரன், ரவீந்திரன், சசிரேகா, கிருத்திகா ஆகியோரின் மாமனாரும் மதிநிலா, பானுசாந், தனுசிகன், சயிந்தன், பிரியந்தி, சத்தியா, பானுகா, தனுஸ்காந், தரணிகன், துகிசன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற அரியமலர் மற்றும் லோகநாதன், தவமணி, ஸ்ரீகாந்தன், இராசரட்ணம், சண்முகநாதன், இராசயோகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் இராசலட்சுமி, பொன்னுத்துரை, மகேந்தினி, பேபிசைலா, ஜெயா, நாகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சித்துப் பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

695/20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
நிறஞ்சன் - 077 905 0185 ,
சுஜிவன் - 077 809 1683
அஜந்தன் - 077 847 0341

தகவல்:
குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 22.11.2018 வியாழக்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்ப தலைவி

அமரர்

**பரமேஸ்வரி பரமகுரு**

(மங்களம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் இன்று (11.12.2019) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும். உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்டஅழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

குடும்பத்தினர்

## ஆள் தேவை

ஸ்ரான்லி வீதியிலுள்ள மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு ஆள் தேவை. ஆண். பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்

தொடர்பு - 077 744 6965

## காணி விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும். 5 பரப்புக் காணியும். யாழ் நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதியில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 7232 535

## பெயர்மாற்றம்

கண்டி வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த **ரஜனிகாந்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **நிமல்ராஜ்** எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(AC 432)(4,17)

நிமல்ராஜ்

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜோதிமலர் றோயிஸ்நேசரட்ணம் (மலர்)



பிறப்பு 21.07.1961 இறப்பு 10.12.2019

கொக்கன் வளவு இணுவில் கிழக்கினை பிறப்பிடமாகவும் பழைய தபாற் கந்தோர் வீதி. உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோதிமலர் றோயிஸ் நேசரட்ணம் நேற்று (10.12.2019) செவ்வாய்க் கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

(cs.29843) (13,17) R.சிவபுத்திரன் - 077 869 4518

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக்கூட்டம்

### கிளைப்பொதுச்சபைக்கூட்டங்கள்

திகதி - 14.12.2019 சனிக்கிழமை

காலம் - முற்பகல் 10.00 மணி

| கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
| --- | --- | --- |
| 01 | ஊர்காவற்றுறை | தலைமை அலுவலகம், ஊர். ப.நோ.கூ.சங்கம் |
| 02 | பருத்தியடைப்பு | சனசமூக நிலையம், பருத்தியடைப்பு |
| 03 | செபஸ்தியார் கோவிலடி | புனித செபஸ்தியார் முன்பள்ளி, கரம்பொன் |
| 04 | பாலக்காட்டுச்சந்தி | புனித செபஸ்தியார் முன்பள்ளி, கரம்பொன் |
| 05 | பொன்னாச்சிக்கடை சந்தி | பொதுமண்டபம், கிராம அபிவிருத்திச் சங்கம், ஊர்காவற்றுறை |
| 06 | நாரந்தனை வடக்கு | பொதுமண்டபம், கிராம அபிவிருத்திச் சங்கம், நாரந்தனை |
| 07 | தம்பாட்டி | பொதுமண்டபம், கிராம அபிவிருத்திச் சங்கம், தம்பாட்டி |
| 08 | நாரந்தனை தெற்கு | முன்பள்ளி நிலையம், நாரந்தனை |
| 09 | புளியங்கூடல் வடக்கு | மகாமாரி சனசமூகநிலையம், புளியங்கூடல் |
| 10 | புளியங்கூடல் தெற்கு | இந்தன் பிள்ளையார் கோவில் மண்டபம் |
| 11 | சுருவில் | சுருவில் ஐயனார் கோவில் மண்டபம் |
| 12 | சரவணை மேற்கு | கந்தசாமி கோவில் மண்டபம் |
| 13 | மெலிஞ்சிமுனை | இருதயராசா கோவில் மண்டபம் |
| 14 | எழுவைதீவு | கிளைக்கட்டடம் - எழுவைதீவு |

சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக்க கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், ஊர்காவற்றுறை

செயலாளர்



### திருமதி செல்லையா தனலெட்சுமி

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், GPS விளையாட்டு அரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா தனலெட்சுமி நேற்று **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**GPS விளையாட்டு அரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.**

தகவல்:
குடும்பத்தினர்

T.P: 021 223 0243

"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ"

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சபாரத்தினம் அன்னலட்சுமி

திதி : பிரதமை



தோற்றம் 07.07.1941 மறைவு 23.11.2018

எமெக்கெல்லாம் நல்வழி காட்டிய தாயே எம் குடும்ப விளக்கே

ஓராண்டு சென்றதம்மா ஓயவில்லை எம்துயரம்
ஓர் நிமிடம் கூட மறக்கவில்லை நாங்களம்மா
என்ன நினைத்துச் சென்றாயம்மா எம்மைவிட்டு
ஏங்கி ஏங்கி தவிக்கின்றோம் நாங்களம்மா
இன்றும் எம் கூடவே இருக்கின்றீர்கள் நீங்கள்
மறையவில்லை - என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள் - உங்கள்
நினைவுகளோடு ஆத்மா சாந்தியடைய
வடசேரி, விக்னேஸ்வரரை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

பெரியவிளான்,
இளவாலை.

(CS 29837)(14,17)

அப்பையா சபாரத்தினம்
குடும்பத்தினர்.

### திருமதி கனகம்மா முருகேசு

(பலகாடு, காரைநகர்)



தோற்றம் 12.04.1939 மறைவு 10.12.2019

பலகாட்டை பிறப்பிடமாகவும் வியாவில் காரை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா முருகேசு நேற்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்புத்துணைவியும் லலித ராணி. காலஞ்சென்ற தேவபாலசுந்தரன். நகுலேஸ்வரி. சிவா. காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைராசசிங்கம். குண்டுலா. காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி. இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நீலகிரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

077 528 0062

தகவல்:
குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### வள்ளிபுரம் மகேந்திரன்



மலர்வு 20.08.1955 உதிர்வு 03.12.2017

அன்பிற்கு இருப்பிடம் எம் அப்பா
அறிவிற்கு உறைவிடம் எம் அப்பா
பண்பிற்கு இலக்கணம் எம் அப்பா
பாரினில் சிறந்தவர் எம் அப்பா ....

அப்பா அப்பா என்று
ஆயிரம் தடவை சொன்னாலும்
ஈடில்லாத எம் உறவின்
இருப்பிடம் எம் அப்பா....

கடவுள் எமக்கு காட்டிக்கொடுத்த
கம்பீரமானவர் எம் அப்பா
காலன் உமை கூட்டிச்சென்ற
காரணம்தான் என்ன அப்பா...

அப்பா !
நீங்கள் விதைத்த விதைகள்
ஆலமரமாய் வளர்ந்து
விழுதுகளோடு வாழ்கின்றன.

**உங்கள் பிரிவால் துயருறும்**

அன்பான மனைவி - தேவமலர்
பிள்ளைகள் - மதன், மதனா, மோகன்ராஜ், பிறேமன்
பேரப்பிள்ளைகள் - திரிஷிகா, அப்ஷிகா, அனன்யா, சந்தோஷ்,சஞ்சனா,
கரிகணன், அஸ்வத், யஸ்மித்ரா

**துன்னாலை மேற்கு, கரவெட்டி.**

077 707 8628

(CS 10408)(14,17)

# 32 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 11 . 1936



மறைவு
04 . 12 . 1987

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

**(அருள் முருகன் ஸ்தாபகர்)**

**திதி: 11.12.2019**

அன்பிற்கு இலக்கணமாய், பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தீர்கள் அப்பா!
எங்களையும் வாழவைத்தீர்களே அப்பா!
கண்கவரும் கம்பீரத் தோற்றமும் - கணீரென்ற
கனிவான பேச்சுரையும், அன்பே உருவான
வட்ட முகம்தனிலே வீபுதி, சந்தனமும்
இன்பமாய் உதிர்க்கும் உதட்டோர சிரிப்பும்,
இன்றும் எம் கண்முன்னே உள்ளதே!
ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும் - என்றும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாதப்பா!

*ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!*

(in.11927) (13.17)

483, கஸ்தூரியார் வீதி,
157, சாரங்கா நகை மாடம், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பராசக்தி சிவநாதன்

**(இளைப்பாறிய சுருக்கெழுத்தாளர் C.T.B)**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சிவநாதன் 10.12.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்டபுத்திரியும் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவநாதனின் (இளைப்பாறிய லிகிதர் CWE) அன்பு மனைவியும் கிருபானந்தா (MSC Agriculture Eng), Dr. யமுனானந்தா (பிரதிப் பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை), Dr. கம்சானந்தி (சமுதாயமருத்துவ நிபுணர்- கொழும்பு), நிஜாநந்தி (விவசாயப்பட்டதாரி), Dr. சிவசக்தி (குழந்தை மருத்துவ நிபுணர் - இங்கிலாந்து), கங்காநந்தி (கலைப்பட்டதாரி) ஆகியோரின் அன்புத்தாயும் பாமினி, நித்திலா, Dr. ஜீவாதரன் (பொது மருத்துவ நிபுணர் - கொழும்பு), பிரசன்னா (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரீவர்ஷினி, ஸ்ரீராம், பிரணவன், சரவணன், அட்சரன், அபிநயன், தேவதீசன், மிருனா, வைஷ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2019) புதன்கிழமை 5 ஆம் வட்டாரம் நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சல்லிப்பரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

(CS 29845)(14.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் விசயரத்தினம்

காரைநகர் செம்பாடு கள்ளித்தெருவைப் பிறப்பிடமாகவும் காரைநகர் முல்லைப்பிலவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விசயரத்தினம் 09.12.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரி, புண்ணியமூர்த்தி (சுவிஸ்), ரேணுகா, கலாநிதி, மேரினி, புஸ்பலதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகைபாலன், ரஞ்சினி (சுவிஸ்), செல்வராயா, ஜெகஜோதி, ஸ்ரீகணேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷாந்தன், கோஷரன், தக்ஷன், தர்ஷிகா, புவிலவன், பிரதீபன், ரூபிகா, சர்விகா, லக்சனா, நானுயா, அபிசரண், சுருதி, சகானா, சைந்தவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் இராயேஸ்வரி, தியாக லட்சுமி, தியாகராசா, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முல்லைப்பிலவு,**
**காரைநகர்.**

(CS/29846)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**077 928 0996**



## திருமதி முத்துலட்சுமி பத்மநாதன்

மண்டைதீவு சிறுப்புவத்தையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலட்சுமி பத்மநாதன் நேற்று (10.12.2019) செவ்வாய்க் கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் தில்லைவனம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் சிவயோகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் (பாலு) அன்பு மனைவியும் திருமகள் (சுவிஸ்), காலஞ்சென்ற திருவருள் மற்றும் திருவாசகி (பிரான்ஸ்) திருவருட்செல்வன் (**சித்தா றெஜிபோம் வேர்க்ஸ்**) ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருபாகரன் (சுவிஸ்), கிருஸ்னேஸ்வரன் (நேசன் - அல்லைப்பிட்டி, பிரான்ஸ்), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, அன்னப்பிள்ளை இலட்சுமியம்மா, சிவசுப்பிரமணியம், அப்பாத்துரை, அப்பாப் பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தெட்சணா மூர்த்தி, அருணகிரிநாதன், சீதாலட்சுமி மற்றும் சத்தியபாமா (மணி).யோகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நீருஜா, ஜஸ்மிரா, சந்தியா, விபூஜனன், தனுசியா, மதுவந்தி, கேசிவாஸ்வன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2019) புதன் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**49 A, அச்சுக்கூட ஒழுங்கை**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**075 039 4357**

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## பொது அறிவித்தல் - 2020

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும், எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1. | ஆதன வரி செலுத்துதல் | 2020ம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்) பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.<br>மேலும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10 % கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். |
| 2. | ஆதனப் பெயர்மாற்றம் செய்தல் | எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3. | காணி உப பிரிவிடுதல் | எமது பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போது எமது உபஅலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |

**4. கட்டிட அனுமதி வழங்கல்**

1.பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள், போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.
கட்டட விண்ணப்பங்களிற்கான பரிசீலனைக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறவிடப்படும்.

| இல | விபரம் | வசிப்பிடம் | ஏனையவை |
|---|---|---|---|
| i | 1 - 500 சதுர அடிக்கு | 300.00 | 400.00 |
| ii | 501 - 1000 சதுர அடி வரை | 350.00 | 500.00 |
| iii | 1001 - 2000 சதுர அடி வரை | 400.00 | 900.00 |
| iv | 2001 - 3000 சதுர அடி வரை | 1000.00 | 1750.00 |
| v | 3001 - 5000 சதுர அடி வரை | 1750.00 | 2250.00 |
| vi | 5001 - 7500 சதுர அடி வரை | 2000.00 | 2800.00 |
| vii | 7501 -10000 சதுர அடி வரை | 2500.00 | 3500.00 |
| viii | 10000 சதுர அடிக்கு மேல் ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | 50.00 | 60.00 |

2. ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து குடியமர்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள் குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும். அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவிடப்படும்

| இல | விபரம் | கீழ்தளம் (1 சதுர அடிக்கு) | மேல்தளம் (1சதுர அடிக்கு) |
|---|---|---|---|
| i | அத்திவாரம் மட்டும் பூர்த்திசெய்தல் | 20.00 | - |
| ii | கூரை தவிர்த்து நிர்மானித்தல் | 30.00 | 30.00 |
| iii | கூரை உட்பட நிர்மானித்தல் | 40.00 | 40.00 |
| iv | முழுமையாக நிர்மானித்தல் | 60.00 | 60.00 |

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 5. | வீதி ஒழுங்கைப்பேணல் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்பரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.<br>அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப்போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப்பேணும் சைகை குறியீட்டுப்பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| 6. | வியாபார அனுமதிப் பத்திரம் -2020 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், ஆட்டோத்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருள்களை விநியோகிப்போர் 2020 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2020 ஆம் திகதிக்குள் செலுத்தி 2020 ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் |
| 7. | இறைச்சிவகைகள், மரக்கறிகள் விற்பனை | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்து 500 m சுற்றுவட்டார தூரத்திற்குள் இறைச்சிவகைகள், மரக்கறிகள் விற்பனை செய்யக்கூடாது என்பதை அறியத்தருகின்றேன். |
| 8. | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | 2020 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனிமாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 9. | சூழல் பாதுகாப்பு உரிமம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1980 ஆம் ஆண்டின் 47ம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ம் திகதிய மற்றும் 1534 /18 இலக்க 2008.02.01 ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும், ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 10 | படவரைஞர்களைப் பதிவு செய்தல் | 2020ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும். |

**11 விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2020 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செலுத்த வேண்டிய விளம்பர கட்டணங்கள் விபரம்

| இல | விபரம் | 3 மாதங்களிற்கான கட்டணம் | 1 வருடத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| i | கொடி விளம்பரம் 1 சதுர அடிக்கு | 20.00 | 100.00 |
| ii | சுவர் விளம்பரம் 1 சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| iii | ஒளிஊட்டப்படாத விளம்பரம் 1சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| v | ஒளிஊட்டப்பட்ட விளம்பரம் 1 சதுர அடிக்கு | 100.00 | 200.00 |

இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2020ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 12 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்/ கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் புதைத்தோ எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களைத் தரம்பிரித்து, பிரதேசசபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 13 | நீர்வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 14 | கனரக வாகன சேவை | மலக்கழிவு மற்றும் திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (கலி பௌசர்) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 15 | கலாசார மண்டபம் மற்றும்விளையாட்டு மைதானம் | பொதுமக்கள் மற்றும் வியாபார , அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 16 | பொதுப்பயன்பாட்டு சேவைகள் | எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள் , ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கிவருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாக பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். |
| 17 | மயானங்கள் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சுடுகாடுகளில் பூதவுடலினை தகனம் செய்வதற்கான கட்டணமாக ருபா 1000.00 எமது உபஅலுவலங்களில் (வாரநாட்களில் உபஅலுவலகத்திலும், வார இறுதி, விடுமுறைநாட்களில் உபஅலுவலக பொதுநூலகத்திலும்) செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.<br>மற்றும் எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட இடுகாடுகளில் பூதவுடலினை நல்லடக்கம் செய்பவர்கள் உபஅலுவலகங்களில் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். |

இவ் அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்களை எமது உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

அ. ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

தொலைபேசி இல: தலைமை அலுவலகம் - 021 225 5381
மானிப்பாய் பட்டினம் - 021 225 5382
மானிப்பாய் கிராமம் - 021 225 5379
பண்டத்தரிப்பு பட்டினம் - 021 225 2021
பண்டத்தரிப்பு கிராமம் - 021 225 2022

(AC) (14.17)

## வான் வீட்டில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 . 04 . 1930

மறைவு 11 . 12 . 2018

### திருமதி லில்லிமேரி பிரான்சிஸ்பிள்ளை

ஆண்டவரே உம் புகலிடமோ
எத்தனை அழகாய் இருக்கின்றது
அரணும் கோட்டையும் சூழ்ந்துள்ளதால்
எங்கும் அமைதி மிளிர்கின்றது.

கோப்பாய் மத்தி, கோப்பாய். (cs.29822) (13.17) குடும்பத்தினர்.

## அழியா நினைவுகளுடன் 18 ஆம் ஆண்டில்



உயிர்ப்பு 15 . 01 . 1944

சங்கமம் 30 . 11 . 2001

### அமரர் கந்தையா பன்னிருகரம்

(முன்னாள் உரிமையாளர் நியூ கௌரி மிதிவண்டி வாணிபம் - நெல்லியடி)

திதி : 11.12.2019

உங்கள் சுவடுகள் இந்த மண்ணில்
அழிந்து போனாலும் எங்கள் உயிருள்ளவரை
உங்கள் நினைவுகள் மூச்சோடு கலந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

" சாந்தி பவனம் "
கொற்றாவத்தை, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(CS 29757)(14.17)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கராணி சிவலிங்கம்

கும்பளாவளை மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராணி சிவலிங்கம் 09.12.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2019) வியாழக்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


077 980 1513

(c 23037) (13.17)

# பருவகால நோய்கள் கவனம் கர்ப்பிணிகளே!

மருத்துவர் கோ.றஜீவ்

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியமான கால கட்டம் அவள் தாயாகும் தருணம் தான். தாய்மை அடைந்திருக்கும் வேளையில் ஒரு பெண் உடல் அளவிலும், மனதிலும் ஆரோக்கியமாக இருந்தால் தான் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்கும்.




**பரவலடையும் நோய்கள்**


யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது நிலவும் பருவ கால மாற்றங்களால் பல்வேறு வகையான நோய்கள் பரவலடைகின்றன. இந்த நிலையில் கர்ப்பிணிகள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்படி சகல கர்ப்பிணிகளும் காய்ச்சல் ஏற்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். காய்ச்சல் ஏற்படும் போது உடனடியாக உங்கள் குடும்ப நல உத்தியோகத்தரிடம் தெரிவிக்க வேண்டும். கர்ப்ப காலத்தில் காய்ச்சல் வருவது இயல்பானது என எண்ணி வீட்டிலேயே இருப்பதனால் பல பாதகமான நிலமைகள் ஏற்படலாம். காய்ச்சலுடன் தொடர்ச்சியாக சிகிச்சையின்றி இருப்பின் கர்ப்பிணிக்கோ, கருவில் வளரும் சிசுவுக்கோ ஆபத்து நிலமைகள் எற்படலாம். இது தொடர்பாக கர்ப்பிணிகள் மிக அவதானமாக இருக்கவேண்டும். அதே போல காய்ச்சலுக்குச் சிகிச்சைகளைப் பெறும் போது மிக அவதானமாக இருக்க வேண்டும். எல்லா விதமான மருந்து வகைகளையும் பயன்படுத்தக் கூடாது. மருத்துவ ஆலோசனைகளின் படியே மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் டெங்கு காய்ச்சல், இன்புளுயன்சா, நிமோனியா, வயிற்றோட்டம் என்பன அதிகமாக பரவி வருகின்றன. கர்ப்பிணிகள் இந்த நோய்களுக்கான அறிகுறிகள் தென்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுதல் அவசியமாகும்.

**இன்புளுயன்சா காய்ச்சல்**

இது இன்ஃபுளுயன்சா எனப்படும் வைரஸ் கிருமியால் ஏற்படுத்தப்படும் காய்ச்சலாகும் . இவற்றில் பல வகை வைரஸ் கிருமிகள் உண்டு அதில் இன்ஃபுளுயன்சா (H1N1)பன்றிக் காய்ச்சல் நோயை ஏற்படுத்தும். கர்ப்பிணிகளை இது பாதித்தால், காய்ச்சல் கடுமையாவதுடன், மூச்சு க்குழாய் அழற்சிநோய், நிமோனியா, சுவாசத்தடை நோய் (ARDS), மூச்சுச் சிறுகுழாய் அழற்சி நோய், இதயத்தசை அழற்சி நோய், மூளைக்காய்ச்சல், சிறுநீரகச் செயலிழப்பு என்று பலதரப்பட்ட பிரச்னைகளை ஏற்படுத்தி உயிரிழப்புவரைகொண்டு வந்துவிடும். எனவே இந்த அறிகுறிகள் தென்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். இது கருவில் வளரும் குழந்தையையும் பாதிக்கும். குறிப்பாக, கருச்சிதைவு ஏற்படலாம். குறைப்பிரசவம் நேரலாம். குழந்தை இறந்தும் பிறக்கலாம். குழந்தைக்கு நரம்பு மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இந்த நோய் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு காற்றின் மூலமே பரவலடையும். எனவே பரவுவதைத் தடுக்க தனி நபர் சகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தாலே போதுமானது. இந்த நோயுள்ளவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் மூக்கையும், வாயையும் சுத்தமானகைக்குட்டையால்மூடிக்கொள்ள வேண்டும். கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும். கர்ப்பிணிகள் முகத்தை மூடிக்கொள்வ்தற்கு முகமூடி அணிவதாக இருந்தால், இதற்கென விசேட முகமூடி மருத்துவமனைகளில் வழங்கப்படும். அவற்றை அணிந்தால் தான் நல்ல பலன் கிடைக்கும். கர்ப்பிணிகளும், குழந்தைகளும் தேவையற்ற சன நடமாட்டமான பிரதேசங்களைத் தவிர்ப்பது சிறந்தது.






**டெங்கு(Dengue)நோய்**

இது நுளம்பு மூலம் பரவலடையும் டெங்கு(Dengue) எனும் வைரஸ் கிருமிகளின் பாதிப்பால் வருகிறது. கர்ப்பிணிகளுக்கு இந்த நோய் ஏற்பட்டால் அதிக ஆபத்துக்களை விளைவிக்கலாம். கர்ப்பகாலத்தின் போது டெங்கு நோய் ஏற்படின் கர்ப்பிணிக்கு அதிக இரத்தப்போக்கு ஏற்படலாம். வயிற்றிலும் நுரையீரலிலும் நீர் கோர்த்துக் கொள்ளலாம். கல்லீரலும் சிறுநீரகமும் பாதிக்கப்படலாம். இரத்த அழுத்தம் குறைந்து கர்ப்பிணியின் உயிருக்கு ஆபத்து வரலாம். மேலும் குறைப்பிரசவம் ஆகவும், எடை குறைவான குழந்தை பிறக்கவும் வாய்ப்புண்டு. எனவே காய்ச்சல் ஏற்பட்டவுடன் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். மருத்துவ ஆலோசனைப்படி குருதிப் பரிசோதனை செய்து டெங்கு நோயா எனக் கண்டறிய வேண்டும். டெங்குக் காய்ச்சலுக்கு மருந்துகள் இல்லை. நோயின் ஆரம்ப நிலையில் கண்டறியப்படின் அதிக ஆபத்துக்களைத் தவிர்க்கலாம். கடுமையான விளைவுகளைத் தடுப்பதற்கு தொடர்கண்காணிப்பு அவசியம். மருத்துவ ஆலோசனைப்படி விடுதியில் தங்கச் சொல்லின் கட்டாயமாகத் தங்க வேண்டும். போதியளவு நீராகாரங்கள் மருத்துவ வழிகாட்டலின்படி உள்ளெடுக்க வேண்டும். டெங்கு நோய் வராமலிருக்க தடுப்பு முறைகளைக் கையாளலே சிறந்தது. நுளம்பு பெருகுமிடங்களான சிறிய தெளிவான நீர்த் தேக்கங்களை அழித்தல், நுளம்புகள் கடிப்பதனைத் தடுக்க நுளம்பு வலை, றிபலன்ஸ் போன்றவற்றை பாவித்தல் போன்றதடுப்புமுறைகளைக் கையாளலாம்.

**வயிற்றோட்டம்**

மழைகாலப்பகுதியில் நீர் மூலமாகப் பரவும் நோய்க்கிருமிகள் அதிக அளவில் பரவலடையும். எனவே, கொதித்து ஆறிய நீரை அருந்த வேண்டும். தேவை யற்ற விதத்தில் வெளியில் வாங்கும் உணவுகளையோ பாணங்களையோ தவிர்க்க வேண்டும். சுத்தமான இடத்தில் சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட உணவுகளையே சாப்பிட வேண்டும். கர்ப்ப காலத்தில் வயிற்றோட்டத்தால் நீரிழப்புகள் ஏற்பட்டால், அது கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை யின் வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். தொற்று ஏற்பட்டுவிட்டால் அலட்சியப்படுத்தாமல் மருத்துவரை உடனடியாக அணுக வேண்டும். மேற்குறிப்பிட்ட நோய்களுக்கான அறிகுறிகள்தென்பட்டவுடன்மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். அதேபோல் கர்ப்ப காலத்தில் தேவையற்ற மாத்திரைகளைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். மகப்பேறு மருத்துவர் அல்லாமல் பொது மருத்துவரிடம் காண்பிக்க நேர்கையில், தான் தாய்மை அடைந்திருப்பதாகச் சொல்ல வேண்டும். அந்தப் பொது மருத்துவர் அதற்கேற்றபடியான மருந்துகளைப் பரிந்துரை செய்வார்.

*கட்டுரையாளர்:*
*தாய் சேய் நல மருத்துவ அதிகாரி*
*யாழ் பிராந்திய சகாதார சேவைகள்*
*பணிப்பாளர் பணிமனை*

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இறால் பண்ணையால் எம்.பிக்கள் மோதல்

மன்னார், டிசெ.11

எருக்கலம்பிட்டியில் நிறுவனம் ஒன்றால் நடத்தப்படும் இறால் பண்ணை விவகாரத்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இடையே கடும் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.



மன்னார் மாவட்டத்தின் இந்த வருடத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அதில் குறிப்பிட்ட இறால் பண்ணை தொடர்பில் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3 அடுக்கு கட்டமாக எருக்கலம்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணையால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனை அங்கிருந்து அகற்றுமாறு உள்ளூர் அமைப்புக்களான கிராம சங்கம், மீனவ சங்கம் மற்றும் பள்ளிவாசல் என்பன கோரிக்கை விடுத்தன. அங்கே பண்ணை மக்கள் ஏற்காத அபிவிருத்தி தேவையற்றது என்று காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பண்ணை 50 ஏக்கரில் அமைக்கப்பட்டிருப்பினும் 60 முதல் 70 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கும் போது 12 திணைக்களங்களின் அனுமதிகள் பெறப்பட்ட பின்பே அமைக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மேசையில் தட்டி தர்க்கத்தில் ஈடுபட்டார்.

200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றமையால், அதனை அங்கிருந்து அகற்றுமாறே கோரப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பதிலுக்கு மேசையில் தட்டி தர்க்கத்தில் ஈடுபட்டார். அதனால் சபையில் கடும் விவாதம் இடம்பெற்றது.

இறுதியில் இறால் பண்ணை அமைப்பதற்கான அனுமதி வழங்கிய அரச நிறுவனங்கள் மற்றும் எருக்கலம்பிட்டி பொது அமைப்புக்கள் உட்பட பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகிய அனைத்தையும் இணைத்து கலந்துரையாடல் மேற்கொள்ளவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அதேநேரம் கடந்த அரசில் கொண்டு வரப்பட்ட 'கம்பெரலிய' திட்டத்தில், வேலைகள் ஆரம்பிக்கப்படாத திட்டங்களை நிறுத்துமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கூறிய போது, மக்களுக்காக வந்த பணத்தை பிரயோசனப்படுத்த விடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார். கூட்டத்தில் வீதி, போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதாரம், மருத்துவம், கல்வி, மீன் பிடி, விவசாயம் போன்றவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (க-105,56)

## சத்தியமூர்த்திக்கே முதலிடம்

இலங்கையில் சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற விருதைப் பெற்றுள்ளார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி. இது அவருக்கு மட்டுமன்றித் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமையே.

இந்த விருதுக்கு மருத்துவர் த.சத்தியமூர்த்தி பொருத்தமானவர் என்பதில் மாற்றுக் கருத்துகள் ஏதும் இருக்க முடியாது. போர்க் காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான காலத்திலும் சரி மருத்துவர் த.சத்தியமூர்த்தி தனது கடமைகளில் எந்த விட்டுக் கொடுப்புகளும் இன்றிச் செயற்பட்டவர்.

இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தில் மருத்துவப் பணிகளை மேற்கொண்டவர் இவர். அங்கிருந்து வெளியேறுவதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும், தன் நலனைக் கருத்தில் கொள்ளாது மக்கள் சேவை பெரிதெனக் கருதி சேவையாற்றியவர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி.

அந்தச் சேவைக்காகப் போரின் பின்னர் அவர் நெருக்கடிகளைச் சந்தித்தபோதும் அவர் தனது மக்கள் சேவை என்ற நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்காது செயற்பட்டு வருகின்றார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக த.சத்தியமூர்த்தி பதவியேற்ற பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகப் பெரியன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பௌதீக வளங்களிலும் சரி, சேவையிலும் சரி மருத்துவர் த.சத்தியமூர்த்தி பணிப்பாளராகப் பதவியேற்றபின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கத்தக்கன. அவற்றால் மக்கள் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்களும் கணக்கிட முடியாதவை.

அவரது நிர்வாகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளின் வசதி வாய்ப்புக்கள் பெருகியுள்ளன. நோயாளர்களில் மட்டுமன்றி, நோயாளர்களைப் பார்வையிட வரும் மக்களின் நலனுக்காகவும் அவர் பல திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளமை கண்கூடு.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவ சேவை கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது வடக்கில் இருந்த மருத்துவமனைகளின் தர நிலைமை மிகப் பின்தங்கியிருந்தது. தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தெற்கில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சவால் விடும் நிலையில் காணப்படுகின்றது என்றால் அதில் மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் பங்கு மிகப் பெரியது.

மருத்துவர் த.சத்தியமூர்த்திக்கு சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற விருது கிடைத்துள்ளமை மகிழ்ச்சி கொள்ளத்தக்கதே. நாடாவிய ரீதியில் அவர் சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற விருதுக்கான தேர்வில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளபோதும், தமிழ் மக்கள் மனங்களில் அவருக்கு எப்போதும் முதலிடமே.

வல்வெட்டித்துறை நகரசபையின்

## பாதீடு தோற்கடிப்பு

வல்வெட்டித்துறை, டிசெ. 11

வல்வெட்டித்துறை நகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மூன்று வாக்குகளால் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது.

தவிசாளர் கோ. கருணானந்தராசா வரவு செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதனால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

8 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராகவும் 5 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர். ஒருவர் நடுநிலை வகித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த இருவரும், சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், தமிழ்த் தேசிக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக எண்மர் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர் நடுநிலை வகித்தார். ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த இருவர் சபைக்கு வருகை தரவில்லை.

"தவிசாளர் மீது நம்பிக்கையில்லை. கடந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்டன. அதனால் இந்த முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கிறோம்" என்று எதிர்ப்புத் தெரிவித்த உறுப்பினர்கள் கூறினர்.

"பாதீட்டில் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை, குறைபாடுகள் இருந்தால் அறியத் தருமாறுகூறி பாதீடு ஏற்கனவே 14 நாள்கள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ஒருவர்கூட குறை உள்ளது? என்பது பற்றிக் கூறியிருக்கவில்லை. அப்படியிருக்க, அதைத் தற்போது எதிர்க்கின்றனர்." என்று சபைத் தவிசாளர் கருணானந்தராசா தெரிவித்தார். (த-21)



## கடலாமை இறைச்சியுடன் ஒருவர் கைது

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கடலாமை இறைச்சியுடன் பூநகரிப் பகுதியில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கடற்றொழிலில் ஈடுபட்ட போது மீனவரின் வலையில் சிக்கிய கடலாமையை கடற்கரையில் இறைச்சிக்காக தயாரப் படுத்திக்கொண்டிருந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து இறைச்சியும் மீட்கப்பட்டது.

சம்பவத்தில் 21 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பானவிசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் சந்தேகநபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்த உள்ளனர். (ஐ-6.35)



# ஈரான் வன்முறையும் அரசியல் குழப்பமும்

ஈரானில் மிகப் பெரிய கலவரம் காரணமாக பதற்றமான சூழல் எழுந்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு 1979ஆம் ஆண்டில் அதிபராக இருந்த ஷா பதவி நீக்கம் செய்யப்பட்டபோது, இதுபோன்ற கலவரம் ஏற்பட்டது. ஈரானின் மதத் தலைவர் அயத்துல்லா அலி கோமெனியும் அதிபர் ஹாசன் ருஹானியும் எதிர்பாராத அளவுக்கு நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தற்போது கலவரம் பற்றி எரிகிறது.

**பெற்றோல் உயர்வால் ஏற்பட்ட பெரும்புரட்சி**

ஈரானியர்கள் ஒருநாள் காலை எழுந்து பார்த்தபோது, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியம் கைவிடப்பட்டிருந்தது. அத்தோடு பெற்றோல், டீசல் விலை 50 சதவீதம் வரை உயர்த்தப்பட்டு இருந்தது. அதற்கு முன்பு வரை உலகிலேயே ஈரானில்தான் பெற்றோல் விலை மிகவும் குறைவாக இருந்தது. ஒரு லீற்றர்பெற்றோல்விலை 30சென்ட். இலங்கை மதிப்பில் 55 ரூபாய் தான். பட்ஜெட் பற்றாக்குறையை சமாளிக்க எரிபொருள் விலையேற்றம் தவிர்க்க முடியாதது என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஈரான் போன்ற நாடுகளில் புரட்சி நடப்பது மிகவும் அபூர்வம். கடந்த 2009ஆம் ஆண்டில் ஒருமுறை கலவரம் ஏற்பட்டது. 2010ஆம் ஆண்டில் அரேபிய கிளர்ச்சி ஏற்பட்டது. அது அமெரிக்கா தூண்டி விட்டதால் தான் ஏற்பட்டது என ஈரான் தலைவர்கள் அதைப் புறந்தள்ளிவிட்டனர். தற்போது தொடர்ச்சியாக நடந்து வரும் போராட்டங்கள், ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பைக் காட்டுவதாக உள்ளது.

எரிபொருள் விலை உயர்வு அந்த வெறுப்பைத் தூண்டிவிட்டுள்ளது. 20க்கும் மேற்பட்ட நகரங்களில் நடந்த கலவரத்தில் 100க்கும் மேற்பட்டோர் பலியானமையால், கலவரத்தைக் கட்டுப்படுத்த அரச நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது. ஆனால் கலவரப் பலி 200க்கும் மேல் இருக்கும் என்கின்றன தனியார் தொண்டு அமைப்புக்கள். இன்டர்நெட் உள்ளிட்ட அனைத்து தகவல் தொடர்புகளையும் அரசு முடக்கி வைத்துள்ளமையால் உண்மையான எண்ணிக்கை வெளிவர வாய்ப்பில்லை.

> ஈரானுக்கு உள்ளூரில் மட்டும் பிரச்சினையில்லை. அந்த நாடு ஏகப்பட்ட கோடி டொலர்களை முதலீடு செய்துள்ள ஈராக்கிலும் லெபனானிலும் அமைதி குலைந்து ஈரானுக்கு எதிராக பதற்றம் அதிகரித்து வருகிறது.

**அமெரிக்கத் தடைகளால் பாதிக்கப்பட்டது ஈரான்**

அமெரிக்காவின் கடுமையான பொருளாதாரத் தடைகள் ஈரானின் பொருளாதாரத்தைப் பாதிக்க ஆரம்பித்து விட்டது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எந்தத் தடையையும் தாண்டி வருவோம் என ஈரான் நாட்டுத் தலைவர்கள் ஆரம்பத்தில் முழங்கியது என்னவோ உண்மை தான். இப்போது நிலைமை அப்படியில்லை. இயல்பு நிலை கைமீறிப் போய்விட்டது. நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறது.

கிளர்ச்சி ஆரம்பித்ததில் தொடங்கி இன்று வரை ஒரு எண்ணெய்க் கப்பலைக் கூட துறைமுகத்தில் இருந்து எந்த நாட்டுக்கும் அனுப்ப முடியவில்லை என ஈரான் அதிபர் ருஹானி சமீபத்தில் கூறியிருக்கிறார். பொருளாதார தடை காரணமாக கடந்த 2016ஆம் ஆண்டில் தினமும் 25 லட்சம் பேரலாக இருந்த மசகு எண்ணெய் ஏற்றுமதி, தற்போது வெறும் 2 லட்சம் முதல் 4 லட்சம் பெரலாகக் குறைந்து விட்டதாக எண்ணெய்த் தொழில் வள நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஈரான் நாட்டின் 3900 கோடி டொலர் பட்ஜெட்டில் ஏறக்குறைய 2500 கோடி டொலர் வரை மசகு எண்ணெய் ஏற்றுமதி மூலம்தான் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரானுக்கு உள்ளூரில் மட்டும் பிரச்சினையில்லை. அந்த நாடு ஏகப்பட்ட கோடி டொலர்களை முதலீடு செய்துள்ள ஈராக்கிலும் லெபனானிலும் அமைதி குலைந்து ஈரானுக்கு எதிராக பதற்றம் அதிகரித்து வருகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு முதல் ஈராக், லெபனான், ஏமன் நாடுகளில் 1,600 கோடி டொலர் வரை ஈரான் முதலீடு செய்துள்ளதாகவும் சிரியாவில் மட்டுமே 100 கோடி டொலர்களை முதலீடு செய்துள்ளதாகவும் அமெரிக்கா மதிப்பீடு செய்துள்ளது. இதுபோக, ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்புக்கு ஆண்டுதோறும் 100 கோடி டொலர் அளவுக்கு நிதியுதவி அளித்து வருகிறது ஈரான். தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் ஈரானுக்கு எதிரான நிலைமை போன்ற காரணங்களால், இது போன்ற நிதியுதவி எல்லாம் நின்றுபோக வாய்ப்புள்ளது.

ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுத்தி தீவிரவாதிகள் மூலம் தங்களுக்கு சொந்தமான எண்ணெய் வயல்கள் ஏவுகணைகளால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றமையால், ஈரான் மீது சவுதி அரேபியா கடும் கோபத்தில் உள்ளது. அமெரிக்காவுக்கு சொந்தமான ட்ரோனை ஈரான் சுட்டு வீழ்த்தி யதால் அந்த நாடும் ஈரான் மீது கோபத்தில் உள்ளது.

அமெரிக்கப் போர் விமானங்கள் ஈரான் மீது குண்டு வீசத் தயாராக இருந்த சூழலில் 10 நிமிடம் முன்னதாக, தாக்குதல் திட்டத்தை ட்ரம்ப் திரும்பப் பெற்றார். ஒரு வேளை தாக்குதல் நடந்திருந்தால் அமெரிக்காவுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கும்.

அதோடு, ஈரான் மிகப் பெரிய பாதிப்பை சந்தித்திருக்கும். ஈரானில் போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசும் இஸ்லாமிய அடிப்படைவாத ஆதரவாளர்களும் எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து அந்த நாட்டுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஏற்கனவே பணவீக்க உயர்வு மற்றும் பொருளாதார தேக்கநிலை காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கும் ஈரான், மேலும் கடுமையாகப் பாதிக்கப்படும். ஈரானில் 20க்கும் மேற்பட்ட நகரங்களில் நடந்த கலவரத்தில் 100க்கும் மேற்பட்டோர் பலியானமையால், கலவரத்தில் கட்டுப்படுத்த அரசு நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது. ஆனால் கலவரப் பலி 200க்கும் மேல் இருக்கும் என்கின்றன தனியார் தொண்டு அமைப்புகள்.



*நன்றி : இந்து தமிழ் திசை*

## விவசாயிகள் விழித்துக் கொண்டதால்
# தத்துவெட்டித் தாக்கம் முழுக் கட்டுப்பாட்டில்

அச்சுவேலி, டிசெ.11

நெற்பயிர்களைத் தாக்கி வந்த வெண்முதுகுத் தண்டு தத்துவெட்டியின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா தேவி ஸ்ரீரங்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வெண்முதுகுத் தண்டு தத்துவெட்டியின் பரவல் தொடர்பான கண்காணிப்பில் பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் விவசாயிகள், அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெற்பயிர்களைத் தாக்கி வந்த வெண்முதுகுத் தண்டு தத்துவெட்டியின் தாக்கம் 25 வீதமான இடங்களில் காணப்பட்டது. அதன் தாக்கம் தொடர்பான பாதிப்பு நெல்விளைச்சலைக் குறைக்கும் இயல்பு தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. விவசாயிகள் அறிவுறுத்தல்களை நூறு வீதமும் ஏற்று உடனடியாகச் செயற்பட்டனர். பிரதேசங்களுக்குப் பொறுப்பான விவசாயப் போதனாசிரியர்கள் உரிய கண்காணிப்புக்களை மேற்கொண்டு விவசாயிகளை வழிப்படுத்தினர். அதனடிப்படையில் தாக்கம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும் திடீரெனத் தாக்கம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் விவசாயிகள் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். - என்றார். (க-11)

## விழிப்புணர்வு வாசிப்பை ஊக்குவிக்க!

யாழ்ப்பாணம்,டிசெ.11

வாசிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

சமூக சிற்பிகள் நிறுவனத்தின் சோனகத் தெரு பிரதேச இளையோர் குழுவின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் ஜே86 மற்றும் ஜே 87 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மாணவர்களை ஒன்றிணைத்து நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

சமூக சிற்பிகள் நிறுவனத்தின் பிரதிநிதி ரவீந்திரன் வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பாக சிறப்புரையாற்றினார். யாழ். பொது நூலக நூலகரும் பொது நூலகச் செயற்பாடுகள் மாணவர்கள் மற்றும் சிறார்களுக்கு நூலகத்திலுள்ள கல்வி மற்றும் இணைப்பாட விதானங்கள் தொடர்பில் உள்ள வாய்ப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

நிகழ்வின் இறுதியில் மாநகரப் பொது நூலகத்தின் நடமாடும் நூலக வாகனம் கொண்டு வரப்பட்டது. மாணவர்கள் வாகனத்தில் ஏற்றி தங்களுக்கு விருப்பமான நூல்களை வாசிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (க)

## டெங்கு கொடிகாமத்தில் 64 பேருக்கு

கொடிகாமம் பகுதிகளில் இதுவரை 64 பேர் டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்குப் பிரதேசங்களில் 40 பேர் இனங்காணப்பட்டனர் என்றுபிரிவுபொதுசுகாதார பரிசோதகர் க. அருள்குமரன் தெரிவித்தார்.

பிரதேச இடர் முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் டெங்கு ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த ஒவ்வொருவரும் தத்தமது வீடுகள் மற்றும் காணிகளைத் துப்பரவாக வைத்திருத்தல் வேண்டும். தற்போது சாதாரண வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. தடிமன், காய்ச்சல், தொண்டை நோ, வயிற்றுநோ, காய்ச்சல் என்றால் அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்குச் சென்று குருதிப் பரிசோதனை செய்யுங்கள். என்றார் அவர். (க-159)

# தமிழர் பிரச்சினைக்கு உதவாது சர்வதேசம்
## இனி இந்தியாதான் என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம். டிசெ. 11

கடந்தகால நெருக்கடிகளுக்குத் தீர்வுதர வராத சர்வதேசம் இனிவரும் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா மட்டுமே அக்கறை காட்டும். சர்வதேசத்தை நம்பிப் பயனில்லை என்று மீன்பிடி நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவருடைய கட்சி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் எனக்கு எந்தளவு பலத்தை தருகின்றனரோ அந்தளவுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலப்படுத்துவேன். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் எமது கருத்துக்கள் முழுமையாகச் செல்லவில்லை. எனினும் என்னை நம்பி தேர்தலில் வாக்களித்த மக்களை விட எனக்கு வாழ்த்துத் தெரிவித்த மக்களின் எண்ணிக்கை பல மடங்காகும். கடந்த தேர்தலில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறக் கூடாது என்று இங்குள்ள தமிழ்த் தலைமைகள் பரப்புரை மேற்கொண்டனர். முதலைக்கு இரையாக்குபவர், வெள்ளைவான் முதலாளி என்றெல்லாம் அவர்க் காரசாரமாக விமர்சித்தனர். ஆனால் தேர்தலில் கோத்தபாய வெற்றியடைந்ததும் முந்தியடித்துக் கொண்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். அரசில்கூட பங்கெடுக்கத் தயார் என்று கூடச் சொல்கின்றனர். இவர்கள் எல்லாம் சுயலாப அரசியல், காழ்ப்புணர்ச்சி போன்றவற்றுக்காகத் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர். (த-ரி1)

## கவனிப்பாரற்று கழிவு வடிகான்

குருநகர் டிசெ.11

குருநகர் கடற்கரை வீதியில் சின்னக்கடை பொதுச் சந்தைக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வடிகான் பல மாதங்களாகக் கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

வடிகானில் குழி ஏற்பட்டுள்ளது. குழி ஏற்பட்டு பல மாதங்களாகியும், அதனைச் செப்பனிட இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

அந்தப் பாதையூடாக சின்னக்கடைப் பொதுச்சந்தைக்குச் செல்லும் பொது மக்கள், வியாபாரிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-51)



# நாய்களால் கழிவுகள் எங்கும் சிதறடிப்பு
## மக்கள் அசௌகரியம்

வீதியில் குவிக்கப்படும் பொதிசெய்யப்பட்ட கழிவு மூடைகளை தெருநாய்கள் நடுவீதிக்கு இழுத்துவந்து பிய்த்துக்குதறி வீதியில் கழிவுகளைச் சிதறடிக்கின்றன. அதனால் அந்த வீதி வழியாகச் செல்லும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணம் கந்தரோடை கந்தையா உபாத்தியார் வீதியும் உடுவில் டச் வீதியும் சந்திக்கும் சந்தியில் இந்த அசிங்கமான நிலை காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். குடியிருப்பாளர்கள் பொறுப்பற்ற முறையில் குப்பைகளை வீதியில் வீசுவதனால் இந்த இந்த நிலைமை ஏற்படுகின்றது. இதற்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. முன்னரும் பலமுறை சபைக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கையில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர். எனவே பிரதேச சபை இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-36)

## அகராதி நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்.டிசெ.11

நடராசா சிறிரஞ்சனின் "யாழ்ப்பாணத் தமிழ் அகராதி", "யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதி"(தொகுதி 1) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறை பேராசிரியர்சுபதினிரமேஸ்தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும், பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் பேராசிரியருமான கலாநிதி சி.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.


சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டு பெரியார் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் பெ.மாதையன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# சின்ன வெங்காயம் 300 ரூபா

குருநகர் டிசெ.11

யாழ்ப்பாணத்தில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. திருநெல்வேலி பொதுச் சந்தை நிலவரப்படி ஒரு கிலோ வெங்காயம் 300 ரூபாவுக்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பெரிய வெங்காயம் கிலோ 280 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. (க-51)





## கொந்தளிக்கிறது கடல் மீனவர்களே எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,டிசெ 11

முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை, மன்னார் வரையான கடல் பரப்புக்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது. அதனால் சில தினங்களுக்குக் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோபெய்யக்கூடியசாத்தியம்காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்குத் திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின்வேகமானதுமணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும். முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை, மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக நீர்கொழும்பு வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். அந்த வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 70தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரையான) பலமான காற்று வீசும். அந்தக் கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (சு-7)

## கோப்பாய் கோட்டத்தில் சித்தி வீதம் அதிகரிப்பு

அச்சுவேலி டிசெ.11

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இருந்து இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 107 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். கடந்த வருடங்களிலும் விட புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்று வீதம் அதிகரித்துள்ளது என்று கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி சி.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2016 ஆம் ஆண்டு 36 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத்தகுதி பெற்றனர். 2017 ஆம் ஆண்டு 96 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றனர். 2018 ஆம் ஆண்டு 81 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றனர். இந்த வருடம் (2019) 107 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (சு-11)

## அடாவடியில் ஈடுபட்ட இருவருக்கும் மறியல்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அட்டகாசம் புரிந்து சேதங்களை ஏற்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்படும் இளைஞர்கள் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மருந்து கட்டச் சென்ற இருவரும் குழப்பம் விளைவித்து பொருள்களுக்குச் சேதம் ஏற்படுத்தி இருவரைத் தாக்கியிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அவர்கள் போதையில் அவ்வாறு செயற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். அவர்களைப் பொலிஸாரே துரத்திப் பிடித்திருந்தனர். அவர்கள் நேற்று நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். (து-9)

### யாழ்ப்பாணத்திலிருந்து

# 922 மெற்றிக் தொன் நெல் சதொசவுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.12

அரசின் அறிவித்தலுக்கு அமைவாக, 922 மெற்றிக் தொன் நெல்லை யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து அரிசியாக்கி கொழும்பு சதொச நிறுவனத்துக்கு அனுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரிசியின் நிர்ணய விலை மற்றும் தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் கிலோ 38 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்ட 922 மெற்றிக் தொன் நெல் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பிரதேசத்தில் உள்ள அரைக்கும் ஆலைகளுக்கு வழங்கி அரசியாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த அரிசி கொழும்பு சதொச நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### வட்டு. மைதானக் கொலைச் சம்பவம்;

## வழக்கைத் தள்ளுபடி செய்ய முடியாது

### யாழ்.மேல்நீதிமன்று கட்டளை

யாழ்ப்பாணம், டிசெ. 11

வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இளம் குடும்பத் தலைவர் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில், 6 எதிரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகை மீது விளக்கம் நடத்தாமலேயே தள்ளுபடி செய்யவேண்டும் என்ற எதிரிகள் தரப்பு விண்ணப்பத்தை யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அத்துடன், எதிரிகள் தரப்புக்கு வழங்கவேண்டிய ஆவணங்களை விரைவாக வழங்கி விளக்கத்தை காலதாமதமின்றி முடிக்குமாறும் வழக்குத் தொடுநரான அரச சட்டவாதிக்கு மேல் நீதிமன்றம் அறிவுறுத்தியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் துடுப்பாட்ட போட்டி 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் நடைபெற்றிருந்தது. இருதரப்பினருக்கிடையே முறுகல் ஏற்பட்டு கைகலப்பாகி யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் ஜெயரட்ணம் டினோசன் அமலன் (வயது -24) உயிரிழந்தார். அவர் ஒரு பிள்ளையின் தந்தை.

சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டைப் பொலிஸில் 9 பேர் வரை சரணடைந்தனர். அவர்களில் 6 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் கொலைக் குற்றச்சாட்டு வழக்கை யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். நீதிமன்றில், பொலிஸாரின் பெரும் குற்றத் தகவல் புத்தகங்களில் இடைச்செருகல்கள் இடம்பெற்றுள்ளன என்று அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் - புலனாய்வு விசாரணைகளில் திரிபுபடுத்தல்கள் உள்ளன. அதனால் இந்த வழக்கை விளக்கத்துக்கு எடுத்து நடத்துவதனால் நீதிக்குப் பங்கம் ஏற்படும் எனவே வழக்கை விளக்கத்துக்கு எடுக்காமல் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும்" என்று முதலாவது எதிரி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கடந்த தவணை கோரியிருந்தார்.

அதற்கு ஆட்சேபனை தெரிவித்த அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன், விளக்கத்தை நடத்த மன்று கட்டளையிடவேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தார்.

விண்ணப்பங்களைஆராய்ந்த நீதிபதி, நேற்று கட்டளை வழங்கினார்.

"எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்ட மாற்றங்கள், உட்புகுதல்கள் என்பன தொடர்பில் மன்றின் முன் எதுவித சாட்சியங்களும் முன்வைக்கப் படவில்லை. முதலாவது எதிரியின் சார்பில் சொல்லப்பட்டதற்கு அமைய எதிரிகளுக்கு உரித்துடைய ஆவணங்கள் வழங்கப்படாதிருப்பின் அவற்றை அரச சட்டவாதி உடனடியாக வழங்க வேண்டும் என மன்று ஆணையிடுகின்றது. எதிரிகளின் தரப்பினரால் முன்வைக்கப்படும் நிலைப்பாடுகளால் வழக்கில் தாமதம் ஏற்படுகின்றது. மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக சுமார் 2 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளது. 6 எதிரிகள் சார்பிலும் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று செய்யப்பட்ட விண்ணப்பம் தற்போதைக்கு நிராகரிக்கப்படுகின்றது. எதிரிகளுக்கு எதிரான விளக்கத்தை நடத்த மன்று தீர்மானிக்கின்றது" என்று நீதிபதி கட்டளையில் தெரிவித்தார். வழக்கு வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (நு-37)

## சாவகச்சேரியில் கலை விழாவும் பரிசளிப்பும்

சாவகச்சேரி.டிசெ.11

சாவகச்சேரி நகர் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 25 ஆவது ஆண்டு வருடாந்தக் கலை விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவந்திரை சிவநாதன், மாவட்ட மூத்த நன்னடத்தை அலுவலகர் சி.சிவகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## வடிகான்கள் சீரமைப்பு

குருநகர் டிசெ.11

குருநகர் றெக்ளமேசன் மத்திய கிழக்கு வீதியில் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட மூன்று வடிகான்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீட்டை றெக்ளமேசன் கிழக்குக்கான மாநகரசபை உறுப்பினர் அ.சத்தியவரதன் வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-51)





## சிறப்பு தேவையுடையோர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி,டிசெ.11

சர்வதேச சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான பொன்னம்பலம் வாகீசன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், சிறப்புத் தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-6)

# கிளிநொச்சியில் இடரில் 28,764 பேர் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.11

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக 8 ஆயிரத்து 959 குடும்பங்களைச் சேர்ந்த 28 ஆயிரத்து 764 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை 6 வீடுகள் முழுமையாகவும், 137 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 259 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 754 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். 4 வீடுகள் முழுமையாகவும், 118 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 45 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் முழுமையாகவும், 17 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 917 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 336 குடும்பங்களைச் சேர்ந்த 972 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மாங்குளம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று மழை பெய்துள்ளமையால், இரணைமடுக் குளத்துக்கு நீர் வருவது அதிகரித்துள்ளது. அதனால் இரணைமடு குளத்தின் 8 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)



## விபத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி, டிசெ.11

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் வீதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானார். காயமடைந்தவர் உடனடியாகவே கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கிளிநொச்சி - பரந்தன் முல்லை ஏ 35 வீதியில் முரசுமோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. இரணைமடு குளத்துக்கு மீன் பிடிப்பதற்காகச் சென்று கொண்டிருந்தவேளை நிலை தடுமாறி வீதியில் வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விநாயகர் கதை நாளை

"விநாயகர் கதை விரதம்" நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறும்.

விநாயகர் ஆலயங்களில் 21 நாள்களும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும். அந்த வகையில் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திலும் தினமும் காலை 8.30 மணிக்குச் சிறப்பு அபிஷேகம், வழிபாடுகள் என்பன இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)



## யாழ்.வளைவில் மின்விளக்கு வேண்டும்

### நல்லூர் பிரதேச சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்ப்பாணம் செம்மணி யாழ்.வளைவு பகுதியில் இரவில் பயணம்செய்வோர் எதிர்கொள்ளும் கஷ்டங்களை நீக்க, மின்விளக்குகளைப் பொருத்துமாறு பொதுமக்கள் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இருளைப் பயன்படுத்தி இனந்தெரியாதோர் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடவாய்ப்புள்ளது. வீதியில் பயணிப்பவர்களிடம் கொள்ளை நடக்கவும் வாய்ப்புள்ளது. ஏற்கனவே சில கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

இரவு நேரம் சூன்யப் பகுதியாகக் காட்சியளிக்கின்றது மேற்படி செம்மணி வீதியையும் கண்டி வீதியையும் இணைக்கும் இந்தப் பகுதியில் செல்வோரல் தூர இடங்களில் வருவோரில் சிலர், அந்த இடத்தில் தரித்து அங்குள்ள பிள்ளையார் கோவிலில் வணங்கி இளைப்பாறிச் செல்வர். தற்போது கடும் இருட்டுக் காரணமாக அங்கு நிற்காது பயணத்தை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் நல்லூர் பிரதேச சபை அசண்டையாகச் செயற்படுகின்றதா என்று சிலர் சந்தேகம் எழுப்புகின்றனர்.

எனவே, நல்லூர் பிரதேசசபை இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து வீதி விளக்குகளைப் பொருத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (த-288)

### நகரில் டெங்கு பெருகும் சூழல்

## 9 பேருக்கு தலா ரூ.2,000 தண்டம்

### மன்றுக்கு வராதோருக்கு அழைப்பாணை உத்தரவு

வலி.தென்மேற்கு, டிசெ. 11

நுளம்புகள் உற்பத்தியாகக் கூடியவாறு சூழலை வைத்திருந்த 9 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.

இந்தக் குற்றச்சாட்டில் நீதிமன்றுக்கு வராத 6 பேருக்கு நீதிமன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

குடாநாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. கட்டுப்படுத்த முன்வந்துள்ள சுகாதாரப் பகுதியினர் வீடுவீடாகச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியும் வருகின்றனர்.

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களிலும் வீடுகளிலும் சோதனை நடக்கின்றது.

அதன்போது, நுளம்பு உற்பத்தியாகக் கூடியவாறு சூழலை வைத்திருந்த வர்த்தகர்கள் உட்பட 15 பேர் சிக்கினர். யாழ்ப்பாண நீதிமன்றில் தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மன்றுக்குச் சமுகமளித்த 9 பேரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஏனைய 6 பேரும் மன்றுக்கு வரவில்லை. அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப் பணித்த நீதிமன்று ஜனவரி மாதத்துக்கு வழக்கை ஒத்திவைத்தது. (த-115)



## யன்னல் உடைத்து வீட்டில் திருட்டு

### பொலிகண்டியில் சம்பவம்

ஆள்கள் அற்ற நேரம் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் தொலைபேசியைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் உரிமையாளர் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் சென்ற நிலையில், வீட்டின் யன்னலை உடைத்த திருடர்கள், அங்கு இருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தொலைபேசி என்பவற்றைத் திருடிச் சென்றனர் என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். முறைபாட்டை அடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ-21,26)

# சிவாஜிக்கு பிடியாணை

## இடைநிறுத்த கடும் பிரயத்தனம்



முல்லைத்தீவு, டிசெ. 11
முல்லைத்தீவு நீதி மன்றில் நடைபெற்றுவரும் வழக்குக்கு, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவா ஜிலிங்கம் கடந்த மூன்றுதவணைகளாக வரவில்லை என்பதால் அவருக்குப் பிடியாணை பிறப்பித்தது நீதிமன்று. முல்லைத்தீவு வட்டுவாகலில் 2018 ஆம் ஆண்டு நில அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு அரசசொத்துக்குச் சேதம் விளைத்தனர் என்று குற்றஞ்சாட்டி பொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். அது விசார ணையில் இருந்துவருகின்றது. நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிவாஜிலிங்கம் மன்றில் முற்பட்டிருக்கவில்லை. முன்னரும் இரண்டு தடவைகள் அவர் மன்றில் முற்பட வில்லை என்று மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனையடுத்து பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னரே சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம் நீதிமன்றுக்குச்சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் சட்டமுறைப்படி உடனடியாகபிடியாணையை இரத்துச் செய்யமுடியவில்லை.

அதனால் தனது சட்டத்தரணி மூலமாக வழக்கை நகர்த்தல் பத்திரம் மூலமாக எடுத்து பிடியாணையை இடைநிறுத்தும் கட்டளைக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-ரி3)

## மனைவி பிள்ளைகளைக் கைவிட்டு

# தப்பியோடும் ஆண்கள்!

## வடக்கில் இப்படியும் அவலம்



வவுனியா, டிசெ.11
வடக்கு மாகாணத்தில் மனைவி, பிள்ளைகளைக் கைவிட்டு, ஆண்கள் தலைமறைவாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அதனால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டு சமூக அமைப்புகளிடம் பெண்கள் உதவி கோரி அலைந்து திரியும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

தமது அமைப்பிடம் உதவி கோரி பெண்கள் வந்தமையை ஆதாரப்படுத்தி அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். "மன்னார் முருங்கன் செம்மண் தீவைச் சேர்ந்த பெண் ஒருவரின் கணவர் சிறுநீரகநோயால் பாதிக்கப்பட்டுள்ளமையால், தனது மூன்று பிள்ளைகளுடன் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைளை எதிர்கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார். அதே இடத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்ணின் கணவர் மனைவி மற்றும் 6 வயது, 2 வயது பிள்ளைகளைத் தவிக்கவிட்டு பக்கத்துவீட்டு சிறுமியுடன் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸ் நிலைய முறைப்பாட்டுடனும், தனது ஆவணங்களுடனும் பிள்ளை களுக்கு உதவிகள் கோரினார். மனைவி, பிள்ளைகளைக் கைவிட்டுச் செல்லும் ஆண்களின் நிலை வடப்குதியில் அண்மைக்காலங்காளாக அதிகரித்துள்ளன. இதனைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(க)

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

2019 ஆம் ஆண்டுதரம் 5 புலமைப்பரிசில் ப்ரீட்சையில் சித்தியடைந்த கல்விக் கூட்டுறவு சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை கல்விக் கூட்டுறவு சங்கம் கிளிநொச்சி காரியாலயத்தில் ஒப்படைக்கலாம். என்று கல்வி கூட்டுறவுச் சங்க வடமாகாணப் பணிப்பாளர் வேல்வின் அறிவித்துள்ளார்.

(க)

## கரைதுறைப்பற்று சபை.

# பாதீடு நிறைவேற்றம்



முல்லைத்தீவு, டிசெ. 11
முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பான அமர்வு, பிரதேச சபையில், நேற்று முன்தினம் சபைத் தவிசாளர் க.தவராசா தலைமையில் நடைபெற்றது. தவிசாளரால் சபையில் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது. சபைக்கு வருகை தந்த 16 உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு செலவுதிட்டம் நிறைவேற்றப்பட்டது. " 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் சபைக்கு உட்பட்ட 13 வட்டாரங்களின் வீதி அபிவிருத்திக்கும் சமமாக நிதி பங்கிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்தமுறை வருமானம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டுக்கான நீதிமன்ற குற்றப்பணம் மற்றும் முத்திரை வரிகள் என்பன இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதனை 2021 ஆண்டே பயன்படுத்த முடியும்" என்று தவிசாள்ர் க.தவராசா தெரிவித்தார்.

(ஐ-ரி3)

# வீதி விபத்தில் ஒருவர் காயம்



முல்லைத்தீவு, டிசெ.11
ஒட்டுசுட்டான் மாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளும், டிப்பர் வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிவில் பாதுகாப்பு திணைக்கள அலுவலகர் காயமடைந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்து நடைபெற்று 20 நிமிடங்களாகியும் அவசர நோயாளர் காவு வண்டி வரத் தாமதம் ஆனதால் வீதியால் சென்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளரின் வாகனத்தில் காயமடைந்தவர் ஏற்றிச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் இடை நடுவில் வந்த நோயாளர் காவு வண்டியை மறித்து காயமடைந்தவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ -ரி3)

## மழை காரணமாக

# ஒட்டுசுட்டான் வீதிகள் சேதம்

## சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை



ஒட்டுசுட்டான், டிசெ.11
கடந்த இரு நாள்களாகப் பெய்த தொடர் மழை காரணமாக ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ளூர் வீதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பேராறு, பண்டார வன்னி, கணேசபுரம், கனகரத்தினபுரம், முத்துஐயன்கட்டு போன்ற பல உள்ளூர் வீதிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. கருவேலன்கண்டலிலிருந்து செல்லும் உள்ளூர் வீதியானது சுமார் 500 மீற்றர் தூரம் வரை சீரமைக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வீதியின் சீரமைப்பு தொடர்பில் பிரதேசசபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். முதன்மை ஒழுங்கைகள், வீதிகள் பற்றி எழுத்துமூலம் முன்னுரிமை அடிப்படையில் சபையில் கொடுத்துள்ளேன். அவை மிகவிரைவில் சீரமைக்கப்படவுள்ளன என்று பிரதேச சபை உறுப்பினர் நா.வன்னியசிங்கம் தெரிவித்தார்.

(ஐ-500)

## தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கு

# வரி அறவிடாதது ஏன்?

## கரைதுறைப்பற்று உறுப்பினர் கேள்வி

முல்லைத்தீவு, டிசெ. 11
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு பிரதேச சபை வரி அறவிடவில்லை. காரணம் என்ன? என்று சபை உறுப்பினர் த.அமலன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சபையின் வரவுசெலவுத்திட்ட அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பிய அவர், மேலும் தெரிவித்ததாவது: இங்கு 15க்கும் மேற்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குரிய வரியை சபை இதுவரை அறவிடவில்லை. வரியை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். தவிர, சபை ஆளுகைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால்களில் குப்பைகள் கொட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். வாய்க்கால்களில் குப்பைகள் கொட்டப்படுவதால் வெள்ளம் வாய்க்காலைவிட்டு வெளியேறி வீதியிலும், தரைகளிலும் தேங்கி பெரும் இடைஞ்சலாகவுள்ளது. இவற்றுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரினார்.

(த-ரி3)

நீதிமன்றில் முன்னிலையாக

# மைத்திரிக்கு அழைப்பாணை



## றோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கியமையால் வந்த வினை

கொழும்பு, டிசெ. 11

றோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்குப் பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பாக விளக்கமளிக்க, உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

பொதுமன்னிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெயரிடப்பட்டிருந்தார். நேற்று செவ்வாய்க்கிழமை இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும்.

இதேவேளை, றோயல் பார்க் கொலைக் குற்றவாளி ஜூட் ஷரமந்த அன்டனி ஜயமஹவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடை எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி வரை உயர்நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர் நவம்பர் 15ஆம் திகதியே கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார் என உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, அவர் தற்போது சிங்கப்பூரில் வசித்து வருகின்றார் என்று கூறினார். (ஒ.5,22)

---

கோத்தாவின் பெயரைப் பாவித்து

# மோசடி செய்த இருவர் கைதாம்

ஜனாதிபதி ஊடகப் பிரிவு

கொழும்பு, டிசெ. 11

அரச நிறுவனங்களில் தொழில் பெற்றுத் தருகின்றோம் என்றுகூறி மக்களை ஏமாற்றி சிலர் பண மோசடியில் ஈடுபட்டு வருகிறார்கள் அவர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது. மோசடி செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அது தெரிவித்தது.

இது பற்றிய செய்திக் குறிப்பொன்றை விடுத்து ஜனாதிபதி ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்று கூறிய சந்தேகநபர்கள் மோசடிகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு இருவர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இராஜாங்கனையில் வசிக்கும் 47 வயதுடைய நிஹால் தசநாயக்க, செவனகல சமகிபுரவைச் சேர்ந்த ஜயக்கொடி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

லட்சக் கணக்கில் பணம் கைமாற்றப்பட்டுள்ளது. போலியான நியமனக் கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அதிகாரி எனக் கூறியும் மோசடிக்கு வழிகோலப்பட்டுள்ளது. நுவன் ஜயக்கொடி என்பவரின் ஊடாக குறித்த பெண்ணுக்கு தொலைபேசி அழைப்பொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பெண்ணிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும்போதே சந்தேநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் 0718591017 என்ற அலைபேசி இலக்கத்தினூடாக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு அறிவிக்கவும் என்று கூறப்பட்டுள்ளது. (த)

---

# மஹிந்தவின் கோரிக்கையை நிராகரித்தார் கோத்தாபய

கொழும்பு,டிசெ.11

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கு விருப்பம் தெரிவித்து மஹிந்த தேசப்பிரிய விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நிராகரித்தார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை நிராகரித்தமை தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ. ஜயசுந்தரவால் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல், தேர்தல் சட்ட திட்ட திருத்தம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மஹிந்த தேசப்பிரிய தொடர்ந்தும் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் செயற்படுகின்றமை அவசியம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

---

தூதரகப் பணியாளர் கடத்தல் விவகாரம்:

# ஐ.தே.கவின் நாடகமே!

டிலான் எம்.பியின் கண்டுபிடிப்பு



கொழும்பு,டிசெ.11

சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தல் சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சியின் கற்பனை நாடகம். மேற்குலக நாடுகளுடன் புதிய ஜனாதிபதி இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும்முயற்சிகளை முறியடிக்கும் நோக்கத்தில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதியின் இந்தியாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ விஜயம் வெற்றிகரமாக அமைந்தது.

அதேநேரம் வல்லரசுகளிடையே அல்லது அரசியல் அதிகார சக்திகளுக்கிடையே இடம்பெறும் மோதல்களில் இலங்கை சிக்கிக்கொள்ளாது என்று வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இந்த நிலையில் சுவிஸ் தூதரகத்தின் கடத்தல் விவகாரம், நன்மைதரும் வகையில் உருவாகிவரும் ராஜதந்திர உறவுகளைச் சீர்குலைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கற்பனை நாடகம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்த வெற்றிஆணையை முழுமையாக மக்களுக்குப் பயன்தரும் வகையிலேயே பயன்படுத்துகிறார். அதன்முதலாவதுவிடயம் அமைச்சரவையை 15 ஆகக் குறைத்தமை.

அதனையடுத்துஅவரது வாகனப் பேரணியை 5 ஆக குறைத்தமை, வெளிநாட்டுப் பயணங்களின் போது முக்கிய பிரமுகர்களின்ஓய்விடத்தை பாவிக்காமல் விட்டமை, அதனைப் பாவிக்கும் முக்கிய பிரமுகர்கள் ஆயிரம் அமெரிக்க டொலர்களை கட்டணமாகச் செலுத்த வேண்டும். இதுதொடர்பாக ஒரு சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு மேலாக சூழல் மாசைக் குறைக்கும் நோக்கம் இளைஞர்களால் முன்னெடுக்கப்படுகிறது.

அத்துடன் நாடு இப்போது புதிய யுகத்தை நோக்கிப் பயணிக்கிறது- என்றார். (க)

---

# பெருந்தெரு பிரச்சினையா? அமைச்சிடம் கூறுங்கள்

கொழும்பு,டிசெ.11

தங்கள் பிரதேசத்திலுள்ள எந்தவொரு பிரச்சினைகளையும், அமைச்சிடம் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் உத்தியோகபூர்வ முக நூல் பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை, வீதி மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்த முகநூல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக தங்களுடைய பிரதேசங்களில் காணப்படுகின்ற பெருந்தெருக்கள் தொடர்பிலான பிரச்சினைகள், தெருக்களை உபயோகிக்கும் போது, மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சிடம் முறையிடலாம்.

அத்துடன் இலங்கையிலுள்ள பெருந்தெருக்கள், அதிவேகப் பாதைகள் தொடர்பிலான பிரச்சினைகள், பயணங்களின் போது முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள், வாகனங்களைச் செலுத்தும் போது சாரதிகள் எதிர்நோக்குகின்ற வீதி சமிக்ஞைகள் தொடர்பிலான பிரச்சினைகள், வீதிவிளக்குகள் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பில் தெளிவூட்டலாம் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)

---

# குடும்ப உறுப்பினர்கள் 'அவுட்'

கோத்தா கண்டிப்பு

கொழும்பு, டிசெ. 11

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் பணியாள் தொகுதிக்கு எந்தவொரு குடும்ப உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

தனது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர் ஒருவரை பிரத்தியேக செயலராக அமைச்சர் ஒருவர் நியமித்துள்ளார்.

எனினும் அவர்களுக்கு பதிலாக வேறு நபர்களை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, தனது பணியாளர் சபைக்காக எந்தவொரு குடும்ப உறுப்பினர்களையும் நியமிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 05 . 1935

மறைவு 09 . 12 . 2019

## திருமதி நிருபராணி அருணாசலம்

யாழ்.சுண்டுக்குளி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி நிருபராணி அருணாசலம் கடந்த 09.12.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அருணாசலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரட்ணம் - உதயலக்சுமி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான திருமதி விமலராணி, பத்மராணி, விமலேந்திரன், ரபேந்திரன் மற்றும் வின்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சரா மற்றும் பிறேம், டப்சி கனகரட்ணம், ரதி, தயா, சிறீதரன், வதனி, சாங்கர் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், ஷயந்தி, மிகீரா, சத்தியேந்திரா, அனுஷா, சுஜீவன் ஆகியோரின் அன்பு மாமியும், மேகலா, யுதிர்ஷரன், ஜனார்த்தன், ஆரனி, அனுஜா, மயூரன், அனிதா, நிரோஷன், தனுஷன், ஸ்வேதா, கஜானன், சிவானுஜா, தர்சன், நீத்து, அஷானி, அனிஷா, அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், ஆபல், றொஷான், சுஜிதா, புவிஷா, கியாரா, தியா, ரேகா, ரோஜா ஆகியோரின் அன்புக் கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (11.12.2019) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு

தகவல்: குடும்பத்தினர்

கஜானன் - 077 700 4040

# ஈர விழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 09 . 1935

மறைவு 22 . 11 . 2018

## அமரர் தம்பையா இரத்தினசபாபதி

திதி:- பூர்வபக்க சதுர்த்தசி (11.12.2019)

ஆண்டொன்று சென்றாலும் ஆறாது - அப்பா உங்கள் நினைவுகள்
பெற்றீர்கள் வளர்த்தீர்கள் பெருமையுடன் பார்த்தீர்கள்
சுற்றம் எல்லாம் போற்றிடவே சொகுசாக வளர்த்தீர்கள்
உறவுகள் ஆயிரம் சூழும் போதும் உங்களையே தேடுகின்றது - அப்பா
நல்லதொரு வழிகாட்டியாக முன்மாதிரியாக
வாழ்ந்து காட்டிய வாழ்க்கைப் பாதைகள்
இன்றும் அழியவில்லை - அப்பா
என்றும் உங்களது நினைவில்
நித்தம் நித்தம் எம் பணி தொடர்கின்றோம்...

உங்கள் நினைவை சுமந்து நிற்கும்

சிங்கராஜர் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(IN/11920)(11,17)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## நாகமுத்து காராளபிள்ளை

(பிரபல வர்த்தகர் - விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

C11924(16/17)

யாழ். நயினாதீவு **5**ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து காராளபிள்ளை **07-12-2019** சனிக்கிழமை (**92** ஆவது வயதில்) நயினாதீவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து, தையலம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வடிவாம்பிகை அவர்களின் ஆருயிர்க் கணவரும், சர்வானந்தசிவம், கிருபானந்தசிவம், ரதீஸ்வரி, நீலானந்தசிவம், காலஞ்சென்ற விநாயகசிவம் (கண்ணா), பாலேஸ்வரி, நித்தியானந்தசிவம், குகனேஸ்வரி, கோபாலசிவம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீனாவதி, தயாளினி, காலஞ்சென்ற லோகநாதன், அமுதபதி, முருகவேள், தெய்வரஜனி, ஸ்ரீகாந்தமணி, யசோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா மற்றும் கனகம்மா, காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், சிவக்கொழுந்து, இராசம்மா, கோபாலபிள்ளை, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரெத்தினம், இலட்சுமி, காலஞ்சென்றவரகளான அமுதலிங்கம், பார்வதி, நாகம்மா, சின்னத்துரை, பாக்யலெட்சுமி, சிவப்பிரகாசம், இராசரெத்தினம், சண்முகரெத்தினம் மற்றும் மகேஸ்வரி, சகுந்தலாதேவி, இந்திராதேவி, பிரேமளாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான திருலிங்கநாதன், கந்தசாமி, மற்றும் ஆனந்தசிவம் ஆகியோரின் பாசமிகு சகலனும், கோபிநாத், நிலக்ஷனா, தனுராஜ், சரணியா, சரணியன், சாமினி, சஞ்சித், சாலினி, மதுசாகி, நிதுனன், சயனவி, சாரங்கி, தீரன், காருணி, ரம்மியா, சசிகாந், மகிழவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (**12.12.2019**) வியாழக்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு நயினாதீவு சல்லிவரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



தோற்றம் 08.03.1927

மறைவு 07.12.2019

தகவல் :குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:-
வீடு - மனைவி Mobile: +94213210887,
ரதி - மகள் Mobile: +94750397116,
இராசன் - மகன் Mobile: +94779453440,
சுதா - மகன் Mobile: +94774203778,
கிருபா - மகன் Mobile: +94778888756,
முருகவேள் - மருமகன் Mobile: +19054771237

University of East London | Southampton Solent University | University of Wolverhampton | RICS | CIOB | Pearson | BTEC Approved Centre

# BTEC HND

Leading to BEng (Hons) — CIVIL ENGINEERING

BIOMEDICAL SCIENCE — Leading to BSc (Hons)



INTAKE NOW ON

MATHU 0777 692 318 | SANCHU 0777 102 131

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- இலகு கட்டணமுறை மற்றும் வட்டியற்ற வங்கிக்கடன் வசதி.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் நடை முறைப்பயிற்சிகள்.

Ranked No.1 Platinum Partner 2016 / 17 | TVEC APPROVED

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna. www.bcas.lk

Mount Campus : 011 272 8082 | Kandy Campus : 081 222 4731 | Kalmunai Campus : 067 222 6899 | City Campus : 011 236 4458

# "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"

**தினமும் நீங்கள் பருகும் நீர் பாதுகாப்பானதா?!!!**
தெளிவான நீரிலும் கண்ணுக்கு தெரியாத மாசுக்களும் நோய்க்கிருமிகளும் உள்ளன என்பதை அறிவீர்களா?! வீடு, காரியாலயங்களில் EVRO / KENT RO WATER FILTER பயன்படுத்தி நீங்களும் பாதுகாப்பான நீரை பருகுவதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.



**உங்கள் வீட்டில் கல்சியம், காவிபடிதல் பிரச்சனையா?!!!**
உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machine களை கல்சியம், மக்னீசியம், மற்றும் காவிப் படிவுகளிலிருந்து பாதுகாக்க EVRO WATER SOFTENER ஐ பொருத்தி பயன்பெறுங்கள்



ULTIMATE WHOLE -House Treatment System

SPECIAL OFFER · BIG SALE THIS MONTH ONLY
மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**HYBRID கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம்**
உங்களின் வீடு மற்றும் தொழிற்சாலை (Toilet, Kitchen,Bathroom, Washing Machine) கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சுத்திகரித்து மீண்டும் பாவனைக்கு உகந்த நீராக மாற்றித்தரும்




அனுகூலங்கள்:
- குறைந்த செலவு
- சிறிய இட பரப்பு போதுமானது (6' X 4')
- நிலத்துக்கு அடியில் வைக்கக்கூடியது
- நிரம்பி வழியாதது
- துர்நாற்றம், கிருமிகள் அற்றது

**SWIMMING POOL, JACUZZI, WATER FOUNTAIN**
வடிவமைத்து, நிறுவி பராமரித்துத் தரப்படும்



MADE IN JAPAN

Everpure Hi-Tec (Pvt) Ltd.
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310 Tel: 021 222 6888

உதயன்

@UthayanPrint

புதன் பொய்கை

டிசெம்பர் 11, 2019

# இருள் நீக்கி ஒளி பரப்பும் கார்த்திகை தீப உற்சவம்

இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்



தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படும் ஓர் சிறப்பான வழிபாட்டு நாள் திருக்கார்த்திகை விளக்கீடு என்றால் மிகையாகாது. கார்த்திகை மாதம் கருமேகங்கள் வானில் சூழ்ந்து மழை பொழிகின்ற மாதம். அத்தகைய கார்த்திகை மாதத்தில் வருகின்ற பௌர்ணமித் திதியும், கார்த்திகை நட்சத்திரமும் கூடி வருகின்ற நாளில் தமிழர்கள் தமது இல்லங்களிலும், ஆலயங்களிலும் பிரகாசமாக எங்கும் ஒளி வெள்ளம் பரவிடும் வகையில் தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடிடும் ஓர் அற்புதமான உற்சவம் இதுவாகும். ஆகவேதான் இதனை திருக்கார்த்திகை உற்சவம், திருக்கார்த்திகை விளக்கீடு எனும் பெயர்களால் அழைத்து வருகின்றோம்.

**கார்த்திகை தீபத் திருநாள் தொடர்பான கதையாடல்**

ஒரு சமயம் படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கும் காத்தல் கடவுளாகிய திருமாலுக்கும் இடையிலே தம்மிடையே யார் பெரியவர் என்கின்ற போட்டி நிலை உருவானது. அப்போது அவர்கள் இருவருக்கும் நடுவிலே சிவபெருமான் பெரும் சோதிப்பிழம்பாக தோன்றி இந்தச் சோதியின் அடி, முடியை யார் முதலில் கண்டு வருகின்றீர்களோ? அவரே உயர்ந்தவர் என மொழிந்தார். இதைக் கேண்மையுற்ற திருமாலும், பிரம்மாவும் அந்தச் சோதிப்பிழம்பின் அடி முடியைத் தேடி அதைக் காண முடியாது தம் தோல்வியை ஒப்புக்கொண்டனர். இந்த நிலையில் தாம் கண்ட இந்த ஜோதி வடிவத்தை மானிடர் யாவர்க்கும் காட்டியருள வேண்டும் என திருமாலும், பிரம்மாவும் எம்பெருமானிடம் விண்ணப்பிக்கவே சிவபெருமானும் அதனை ஏற்று கார்த்திகை மாதத்தின் கார்த்திகை நட்சத்திர நாளில் சோதி வடிவில் தோன்றி காட்சி கொடுத்தார், அவ்வாறு காட்சி கொடுத்த அந்த ஜோதிப் பிழம்பானது குளிர்ந்து ஒரு மலையாக ஒடுங்கியது எனவும், அந்த மலையே தென்னிந்தியாவில் உள்ள திருவண்ணாமலை எனவும், இன்றும் அங்கு திருக்கார்த்திகை தீபத் திருவிழா மிகமிகச் சிறப்பாக இடம்பெறுகின்றது எனவும் புராணங்கள் கருத்துரைக்கின்றன.

**கார்த்திகை விழாவின் வகையறா**

இத்தகு கார்த்திகை விளக்கீட்டு விழாவை எமது இந்து மக்கள் குமராலய தீபம், விஷ்ணுவாலய தீபம், சர்வாலய தீபம் அத்தோடு வீடுகளில் தீபம் எனும் வகையறாக்களாகப் பிரித்துக் கடைப்பிடிக்கின்றனர். குமராலய தீபம் என்பது கார்த்திகை மாதத்தின் கார்த்திகை நட்சத்திரம் கூடி வருகின்ற நாளில் சகல முருகன் ஆலயங்களிலும் தீபம் ஏற்றி வழிபடுவதாகும். அவ்வகையில் நேற்றைய தினம் குமாராலய தீபம் அமைவுறுகின்றது. அதுபோல விஷ்ணுவாலய தீபம் என்பது சகல விஷ்ணு ஆலயங்களிலும் தீபங்களை ஏற்றி வழிபடுவதாகும். அதைப் போலவே சர்வாலய தீபம் என்பது முருகன், விஷ்ணு ஆலயங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆலயங்களிலும் தீபம் ஏற்றி வழிபடுவதாகும். அவ்வகையில் இவ்வருடம் விஷ்ணுவாலய தீபம், மற்றும் சர்வாலய தீபம் இரண்டும் இன்றைய தினத்திலே அமையப்பெறுகின்றது. மேலும் சகல மக்களும் தமது வீடுகளில் தீபம் ஏற்றி வழிபடுவதும் இன்றைய தினத்திலேயாகும்.

**இல்லங்களில் ஒளி பரவும் கார்த்திகை விளக்கீடு**

இன்றைய நாளில் இல்லங்கள் தோறும் தீப ஒளி வெள்ளம் பரவிக் காணப்படும். பௌர்ணமி நிலவு கிழக்கு வானில் தோன்றிடும் வேளையில் வீட்டின் வாசலில் வாழைக் குற்றி நட்டு அதில் கொப்பாறத் தோங்காய் வைத்து திரி இட்டு தீபம் ஏற்றுவதுடன், வீட்டின் உள்ளேயும், வெளியேயும் மற்றும் வீட்டினைச் சுற்றிப் பல இடங்களிலும் பல சிட்டி விளக்குகளில் தீபமேற்றி அதை வரிசையாக அடுக்கி தீபங்களால் அழகுபடுத்தி வழிபடுவர் மக்கள்.

**சொக்கப்பனை எரித்தல்**

கார்த்திகை தீபத் திருநாளில் சொக்கப்பனை எரித்தல் எனும் சிறப்பு வாய்ந்த செயற்பாடு ஆலயங்களில் இடம்பெறுவது வழக்கமாகும். ஆலயங்களின் முன்பாக வாழைமரம் நட்டு. அதனைச்சுற்றி தென்னை ஓலை மற்றும் பனையோலை என்பவற்றைப் பிணைத்து அதற்கு தீயை மூட்டிப் பெரிதாக எரிப்பார்கள். அது ஒளி மயமாக எரிந்து எங்கும் பிரகாசமாக விளங்கிடும். சிவபெருமான் பெரும் சோதி வடிவிலே ஒளி வடிவில் தோன்றியதை நினைவு கூரும் வகையிலே இந்த சொக்கப்பனை எரிக்கின்ற மரபு இன்றும் நம் இந்து ஆலயங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

**தீபம் ஏற்றி இறைவனை வழிபடுவோம்**

இறைவன் ஒளி வடிவிலும் எங்கும் நிறைந்திருப்பவன். ஆகவே தான் இறைவனை ஒளி வடிவிலும் நாம் வழிபடுகின்றோம். 'தவிர இறைவனுக்கு தீபம் ஏற்றி வழிபடுகின்றோம். ஆகவே இன்றைய தீபத் திருநாளிலே நம் இல்லங்களிலும், ஆலயங்களிலும் தீபங்கள் பலதை ஏற்றி இருளதைப் போக்கிடுவோம்,



இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமசிவாயவே

எனும் தேவாரப் பதிகம் கூறும் கருத்திற்கமைய ஒளி கொண்டு நம் உள்ளத்தில் உள்ள அகந்தை எனும் இருளினையும் போக்கி நல் ஒளி பெருக்கி வாழ்வில் நலம் பெற்று வாழ்ந்திடுவோம்.


## கண்கவர் மேடையில் நடந்த வவுனியா பிரதேச செயலக

# கலாசார விழா



பிரதேசங்கள் தங்களுக்குரிய கலை கலாசார பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் விதமாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச செயலகம் மற்றும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய 'பிரதேச கலாசார விழா' கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஷ்குமார் முதன்மை அதிதியாக கலந்துகொண்டிருந்தார். மங்கல இசை முழங்க விருந்தினர்கள் மற்றும் கலைஞர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டமையுடன் தமிழ்மொழி வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. வரவேற்புரையை தமிழ்மணி அகளங்கன் வழங்க, வரவேற்பு நடனத்தை சிதம்பரேஸ்வரம் நடனாலயத்தைச் சேர்ந்த மாணவி வழங்கியிருந்தார்.








மண்டபத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் கானாமிர்த கலாலயத்தின் இசைச் சங்கமம், நிருத்தியார்ப்பண நாட்டிய கலாலய மாணவிகள் வழங்கிய செம்பு நடனம், கலைநிலா கலையகத்தின் பன்றிப்பள்ளுபா நாடகம், நிருத்திய நிகேதன நுண்கலை கல்லூரியின் 'நரகாசூரமர்தனம்', அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரியின் 'கண்டி அரசன்' வடமோடி, நாட்டுக்கூத்து போன்றவை நிகழ்வுக்கு மெருகூட்டியிருந்தன.

அதனைத் தொடர்ந்து வவுனியா பிரதேசத்தின் மொழி, கலை கலாசார, பண்பாடு, இயல், இசை நாடகத் துறையில் பங்களிப்புச் செய்தவர்களுக்கான 'கலாநேத்ரா' விருதும் வழங்கப்பட்டது. விருது வரிசையில் சிற்பம் ஆறுமுகம் விஜயராசா, இலக்கியம் விஜயலட்சுமி இராஜமனோகர், சொற்பொழிவு லத்தீப் சதீஸ்குமார், மரபுஇசை சக்திவேல் இராஜேஸ்வரன், அறிவிப்பு துரைச்சாமி ரவிச்சந்திரன், குறும்படம் விஜயரட்ணம் சுபாஸ்கரன், ஓவியம் சுப்பிரமணியம் கௌரீசன், பரதம் நிவேதா தியாகராஜா ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் தொன்மை சார்ந்த வரலாறுகளை உள்ளடக்கிய 'வவுனியம் 3' கலை இலக்கிய பண்பாட்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலுக்கான ஆய்வுரையை விரிவுரையாளர் பத்மஜோதி ஜெயச்சந்திரன் வழங்கியிருந்தார். நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜகுகனேஸ்வரன், சிறப்புவிருந்தினர்களாகவவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஷ்ணானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-110)



## சமாதான நீதிவானாக நியமனம்



வரணி மாசேரியைச் சேர்ந்த கருணாமூர்த்தி விஜயகாந்தன் முழுத் தீவுக்குமான சமாதான நீதிவானாக அண்மையில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேமசங்கர் முன்னிலையில் பதவியேற்றார்.

இவர் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், மாசேரி சனசமூக நிலையத் தலைவர், வரணி பிரதேச வைத்தியசாலைகள் நோயாளர் நலன்புரி சங்கச் செயலாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர், வடவரணி கிளைக் குழுவின் செயலாளர், மாசேரி சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர், தென்மராட்சி அபிவிருத்திக்கழக உறுப்பினர் மாசேரி வீட்டுத் திட்ட குழுவின் தலைவர் போன்ற பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-159)



## இந்த வருடத்துக்கான 'தேச சக்தி' விருது மூத்த விரிவுரையாளருக்கு

2019ஆம் ஆண்டுக்கான நெல்சன் மண்டேலா ஞாபகார்த்த தேச சக்தி விருது கோப்பாய் ஆசிரிய கலாசாலை மூத்த விரிவுரையாளர் ஜானகி தர்மஜீலனுக்கு கிடைத்துள்ளளது. அகில இலங்கை சமாதானப் பேரவையால், கடந்த சனிக்கிழமை மாலை மகிந்த சில்வா மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலேயே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கத் தூதுவர் மார்க்ஸ் அந்த விருதை வழங்கினார். (ம-21)

















# தென்மராட்சியில் சிறப்புற நடந்த கலாசார விழா

தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பெருவிழா அண்மையில்சாவகச்சேரிசிவன் கோவில்சாலையில் உள்ளதென்மராட்சிகலைமன்றகலாசாரமண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேசசெயலர்திருமதிதேவந்தினிபாபுதலைமையில் நடைபெற்றநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ் மாவட்டமேலதிகச் மாவட்டச்செயலர் க. கனகேஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணபண்பாட்டலுவல்கள்திணைக்களஉதவிப்பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக முன்றில் இருந்து பாரம்பரிய அலங்காரஊர்திகளுடன்விழாமண்டபத்துக்குவிருந்தினர்கள் அழைத்துச்செல்லப்பட்டுசாவகச்சேரிசிவன்கோவிலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த்தாயின் உருவப்படத்தை தாங்கியவாறு விழா மண்டபத்துக்குச் சென்றனர். அங்கு தமிழ்த் தாய்க்கு முதன்மை விருந்தினர் மலர் மாலைஅணிவித்தபின்னர்நிகழ்வுகள்ஆரம்பமாகின. பிரதேசகலைமன்றங்களின்கலைநிகழ்வுகளும்பிரதேசத்தின் கலாசாரப் பெருவிழாவை முன்னிட்டு தென்பொழில் நூல் வெளியீடும் இடம்பெற்றன. வெளியீட்டுரையினையாழ்ப்பாணம் இலங்கைதிறந்தபல்கலைக்கழக பணிப்பாளர் கி. கந்தவேள் நிகழ்த்தினார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்டகாலமாக கலைத்துறைக்குச் சேவையாற்றிய ஐவருக்கு பிரதேசத்தின் அதியுயர்விருதான கலைசாகரம்விருதுகளும்வழங்கப்பட்டன. பிரதேசசெயலகத்தினால்நடத்தப்பட்ட இவ்வருடத்திற்கானதேசிய கலை இலக்கியப்போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலாசார அலுவல்கள் திணைக்களம் சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை கலாசார அலுவல்கள் அதிகார சபை ஆகியவை இணைந்து விழாவினை நடத்தியிருந்தன.

(ம-9,159)

# அழிகின்றன தமிழர்களின் பண்பாடுகள்

## மேலதிகமாவட்டச்செயலர்ஆதங்கம்

நீண்ட பாரம்பரிய முறைகளைக் கொண்ட தமிழினம்தற்போது, பண்பாட்டு அடையாளங்களைப் பின்பற்றாது மிகவும் மோசமாகச் சீர்குலைந்து செல்லும் துர்ப்பாக்கிய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி சிவன் கோவிலடி கலாசார மண்டபத்தில்கடந்தசனிக்கிழமைஇடம்பெற்றகலாசார விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழருக்கென்று சிறப்பான பண்பாட்டு விழுமியங்கள்உள்ளன. அவர்களதுமொழி, உரையாடல், ஆடை அணியும் முறை இவ்வாறு பல்வேறுபட்ட பண்பாட்டு விழுமியங்கள் ஊடாக நாங்கள்வாழ்ந்து வந்த பண்பாட்டுமரபுகள் தற்போது மேலைத்தேயசெல்வாக்குகள்மற்றும்கலாசார கலப்புகள் காரணமாக மாறி வருவதை அவதானிக்கக் கூடிதாக உள்ளது. அழிந்து போகும் பண்பாட்டுவிழுமியங்களைப்பாதுகாக்கவேண்டும். ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுகின்றமை வரவேற்கத்தக்கது - என்றார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தெரிவித்ததாவது:

மக்கள்பல்வேறுபட்டசினிமா,சின்னத்திரைகளில் மூழ்கி இருக்கின்றமையால்எங்களுடையபாரம்பரியமான கலைகளில் ஈடுபடுவது குறைந்துள்ளது. கோவில்களிலோ அல்லது வெளியிடங்களிலோ ஏதாவது கலை சார்ந்த நிகழ்ச்சிகளாக இருக்கலாம் மக்கள் கூட்டம் செல்வது மிகவும் குறைவு. அவர்கள் வீடுகளிலே இருந்து தொலைக்காட்சியில்தொடர்நாடகங்களையும், படங்களையும்பார்த்துக்கூடுதலானநேரத்தைத் தொலைக்காட்சியில் செலவிடுகின்றமையை நாங்கள் அவதானிக்கின்றோம். அந்த நிலை மாற வேண்டும். எங்களுடைய கலைகள் அழிந்து செல்கின்றன. அவை மேம்படுத்தப்பட வேண்டும். அவற்றை இரசனைக்குரியதாக மாற்றித்திசைதிருப்பவேண்டியதுஎமதுபொறுப்பாகும் - என்றார்.

கோப்பாய்ஆசிரியபயிற்சிகலாசாலையின்பிரதி அதிபர்செஞ்சொற்சொல்லருவி ச. லலீசன் தெரிவித்ததாவது:

இந்த உலகில் நிலையான இன்பத்தைப் பெறுவதற்கு கலைகள் உதவும். கலைகளில் இளம் சந்ததியினர் ஈடுபடுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பெற்றோர்கள் மத்தியில் இருக்கக்கூடிய தவறான எண்ணம் மாணவர்கள் கலையைப் பயில்வதால் என்ன கிடைத்து விடப் போகிறார்கள் என்பதாகும். இந்தப்பிற்போக்குத்தனமான எண்ணங்களினாலே பிள்ளைகள் மத்தியில் கலையைப் பயில்வதற்கான ஆற்றுகைஆர்வம்குறைந்துசெல்கிறதோ எனத் தோன்றுகிறது. இங்கே கலை சார்ந்த கற்கைகள், கலை சார்ந்த ஆற்றுகைகள் மெல்ல மெல்ல இயங்குகின்றன. எனினும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையை இன்னும் எய்தவில்லை. வெறுமனே ஏட்டுக் கல்வியால் மனமகிழ்ச்சி ஏற்படப் போவதில்லை. விளையாட்டினால் மனமகிழ்ச்சி ஏற்படப் போவதில்லை. எங்கள் மனதுக்கு ஒரு மனமகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியநிகழ்வு எது என்றால் கலைசார்ந்தகற்கைகள் ஆகும் - என்றார்.

(க-131,159)



அமரர் திலகநாயகம் போல் மறைந்து பத்தாவது ஆண்டு நிறைவின் நினைவாக இந்தக் கட்டுரை வரையப்படுகின்றது.

# மறைந்தும் மறையாத திலகநாயகம் போல்

கலாநிதி சுகன்யா அரவிந்தன்

இலங்கையின் புகழ்பூத்த கர்நாடக இசைக் கலைஞர்களுள் மிகவும் நேர்த்தியானவர் சங்கீதபூசணம் அமரர் லயனல் திலகநாயகம் போல். ஒரு காலத்திலே கர்நாடக இசை மேடைகள், மெல்லிசை நிகழ்ச்சிகள், நாட்டிய விழாக்கள் என எல்லா மேடைகளிலும் தனித்துவமான தன் முத்திரையினைப் பதித்தவர் சங்கீதபூசணம் லயனல் திலகநாயகம் போல். சபையோரை அன்பாலும் சங்கீதத்திறத்தாலும் ஒரு காலத்திலே கட்டிப்போட்டவர். சங்கீதம் இவரை நாடிவந்ததா அல்லது இவர் சங்கீதத்துக்காக வாழ்ந்தாரா என்பது எவராலும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இசையுடன் அனைத்துவிதமான உறவினை இவர் கொண்டிருந்தவர். கல்லூரிக் காலங்களிலே சமூகம் எதிர்பார்க்கின்ற மேல்நிலைப் படிப்புக்களைத் தொடர வாய்ப்பிருந்தும் இசையின் மீது கொண்ட விருப்பினால் இசை பயில தமிழகம் சென்று, இசை மேதைகளால் புடம்போடப்பட்டு தனித்துவம் மிக்க கலைஞனாக இலங்கை மீண்ட இவர், பல்லோரும் வாழ்த்த இசை அரங்குகளை அலங்கரிக்கத் தொடங்கினார்.

இசையின் நுட்பங்களை இனங்காணவும், மரபு மாறாமல் புதுமைகள் செய்ய வேண்டும் என்பதிலும் மிகுந்த ஆர்வமும், முயற்சியும் கொண்டவர். இவரது ஒவ்வொரு இசை அரங்கு ஒவ்வொரு புதுமைகளோடு மிளிரும், ரசிகர்களின் இசை தாகம் தீர்க்கும்.

ஆசிரியத்துவத்திற்குரிய இலக்கணங்கள் வலுவிழந்து வருகின்ற இந்த வேளையிலே அந்த உறவினை காத்திரம் மிக்கதான ஒருபாலமாக அமைத்து வாழ்ந்தவர் போல் என்றால் மிகையாகாது.

ஆங்கிலப் புலமை கொண்ட திலகநாயகம் போல் பாடுவதில் மாத்திரமல்லாமல் பேச்சாற்றிலும் திறமைமிக்கவர். தொண்ணூறுகளின் முற்பகுதியிலே யாழ்ப்பாணத்திலே இசையை வளர்ப்பதிலே முதன்மை பெற்றிருந்த இலங்கைக் கம்பன் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை சார் பொருளிலான பட்டிமண்டப நிகழ்வு ஒன்றிலே இவர் ஆற்றிய உரை இசை ரசிகர்களை வியப்பிலாழ்த்தியது மாத்திரமல்லாமல் பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தமை குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய ஒன்று.

# 'பேரும் ஊரும்' நூல் வெளியீட்டு விழா

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் ஞா.ஜெகநாதனின் பேரும் ஊரும் என்னும் இடப்பெயர் ஆய்வு நூல் நேற்றைய தினம் காலை ஒன்பது முப்பது மணியளவில் வவுனியா சுத்தானந்தா இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம

















# தர்மபிரபாஷ்வர விருது யாழில் இருவருக்கு

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'தர்மபிரபாஷ்வர' விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து இருவர் விருதுகளைப் பெற்றனர்.

தேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ஆசீர்வாதத்துடன் தேசிய கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், கத்தோலிக்க வெகுசன ஊடக மத்திய நிலையம் மற்றும் இலங்கை கிறிஸ்தவ சபையின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் 37 கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இக்கலைஞர்கள் தேசிய ரீதியாகவும் மறைமாவட்டங்கள் ரீதியாகவும் பல்வேறு துறைகளில் பணியாற்றுபவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். மறைமாவட்டங்கள் ரீதியாக மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுக்கள், தமக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் இரண்டு கலைஞர்களை இவ்விருது பெறுவதற்கு தெரிவுசெய்து அனுப்பியிருந்தன. இவ்வகையில் யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து இருவர் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் பணியாற்றி வரும் இசிதோர் மரியதாஸ் ஜெயசீலன், இரணைப்பாலை பங்கைச் சேர்ந்த திருமதி பிலோமினா யேசுராசா ஆகியோர் சாதனையாளர் விருதுகளை பெற்றுக்கொண்டார்கள். (ம-222)

# வெற்றிக்கு வலிகள் தேவை நூல் வெளியீடு

யாழ். றிம்மர் மண்டபத்தில் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 30ஆவது ஆண்டு நினைவுக் கூட்டமும் தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய 'வெற்றிக்கு வலிகள் தேவை' நூல் வெளியீடும் அண்மையில் நடைபெற்றபோது...







# 90 ஆவது ஆண்டை நிறைவு செய்கின்ற அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலயம்

– கலாபூசணம் சிவநாமம் சிவதாசன்

**மண்கண்ட வெண்குடைக் கீழாக**
**மேற்பட்ட மன்னருமென்**
**பண்கண்டளவிற் பணியச்செய்வாய்**
**படைப்போன் முதலாம்**
**விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்**
**விளம்பிலுன் போல்**
**கண்கண்ட தெய்வமுளதோ**
**சகலாகலவல்லியே!**

எனச் சரஸ்வதி அம்பாளைச் போற்றிப் புகழ்ந்து பாடினார் குமரகுருபர சுவாமிகள். மேலும் பட்டர் என்பார் அபிராமி அந்தாதி பாடி சரஸ்வதியின் அருளைப் பெற்றார். கம்பர் சரஸ்வதியை நேரே அழைத்து நல்லருளைப் பெற்றார். இவ்வாறு அறிவைத் தரும் தெய்வமாக சரஸ்வதி தேவி விளங்கியபோதும் சைவமக்கள் எவரும் எங்கணும் சரஸ்வதி அம்பாளுக்கு ஆலயம் அமைத்து வழிபடவில்லை. இருந்த போதும் தென்னிந்தியாவின் கருவூர் என்னும் கிராமத்தில் அபிராமி அம்மன் என்னும் பெயரில் சரஸ்வதிக்கு ஓர் ஆலயம் இருப்பதாக வரலாற்று ரீதியாக அறியமுடிகின்றது. அதுபோலவே இலங்கையின் யாழ்ப்பாணம் அரியாலைக் கிராமத்தின் மேற்கில் சரஸ்வதி அம்பாளுக்கென ஒரு ஆலயம் 1900 ஆண்டுகளுக்குப் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றது. இவ்வாலயமானது நல்லூரின் கிழக்கே சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் என்னும் பெயர்வரக் காரணமாக இருந்த யாழ். இசைத்துப்பாடி பரிசு பெற்ற பாணன் என்பவனால் கட்டப்பட்ட பாணன்குளப் பகுதியிலிருந்து மிக அண்மையான தூரத்தில் அரியாலை மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் இவ்வாலயமே சரஸ்வதி அம்பாளுக்கென முதன்முதலாக இலங்கையில் தோற்றம்பெற்ற ஆலயமாகும்.



**தோற்றமும் வரலாறும்**

ஆலயம் தோற்றம்பெற்ற வரலாறை நோக்குமிடத்து யாழ்ப்பாணம் அரியாலைக் கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த நுண்கலைத் தொழில் வல்லுநராகத் திகழ்ந்த அமரர் கதிர்காமு வேலுப்பிள்ளை என்பரால் 1929ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திர நாளில் இந்தச் சரஸ்வதி அம்பாள் ஆலயம் நிறுவப்பட்டது. இந்தநாளானது சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்த நாவலர் பெருமானின் குருபூசைத் தினமும் ஆகும். அமரர் கதிர்காமு வேலுப்பிள்ளை தாம் அமைத்த புது மனை ஒன்றை உருவாக்கி அந்த வீட்டில் வைப்பதற்காக கடைக்குச் சென்று படங்களை வாங்கி வந்து அவற்றைச் சுற்றியிருந்த கடதாசிகளை அகற்றிப் படங்களைப் பார்த்த போது இலட்சுமிப் படத்துக்குப் பதிலாக சரஸ்வதி படம் இருந்தது. இதனைக் கண்ட அவர் சரஸ்வதி படத்தை மறுநாள் கடையில் கொடுத்து மாற்றலாம் என நினைத்திருந்தார். ஆனால் அன்றிரவு அவரின் கனவில் ஒரு வெள்ளைச் சேலை கட்டிய பெண்மணி தோன்றித் தன்னை வைத்து வழிபாடு செய்யுமாறு அவருக்கு அருள் வாக்குக் கொடுத்தார். அந்தப் படத்தை அவர் தனது சொந்தமான காணியில் முதலில் குடில் அமைத்து வழிபாடு செய்து வந்தார். இந்த வழிபாட்டுக்கு உதவியாக அவரது பிள்ளைகளான நடராசா' ஐயாத்துரை ஆகியோர் செயற்பட்டு வந்தனர். இந்த ஆலயத்தில் தைப்பொங்கல் மகாசிவராத்திரி பங்குனித் திங்கள், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனிஉத்தரம், நவராத்திரி, ஆலயக்கல் நாட்டிய தினம், திருவம்பா ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் இடம்பெறுகின்றன. இவை ஆலயச் சூழலில் வதியும் அடியவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. கலாசார அமைச்சின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. நவராத்திரி காலத்து விஜயதசமி நாளில் இடம்பெறும் வித்தியாரம்ப நிகழ்வில் தம்பிள்ளைகளை வித்தியாரம்பம் செய்விப்பதற்காக பலர் இந்த ஆலயத்துக்கு வருகை தருகின்றார்கள். அன்னை சரஸ்வதி அம்பாளின் அருளால் ஈர்க்கப்பட்டு பலர் இந்த ஆலயம் வந்து தரிசனம் செய்வதையும் நேர்த்தி வைத்து சித்தி கிடைக்கப் பெற்றதும் நேர்த்தி நிறைவுக்காக அவர்கள் காணிக்கைகள் செலுத்துவதையும் இங்கு காணலாம். ■



## திருகோணமலை பட்டின சாகித்திய விழா.!



திருகோணமலை பட்டின சாகித்திய விழா, திருகோணமலை யுபிலி மண்டபத்தில் பிரதேச கலாசார அதிகார சபையின் தலைவரும் பிரதேச செயலாளருமான ஜே. எஸ்.அருள்ராஜ் தலைமையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த விழாவின் அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் கலந்து சிறப்பித்தார்.





## வித்தியாதீபம் செய்திமடல் தாளங்குடாவில் வெளியீடு

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் 'வித்தியாதீபம்' செய்திமடல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மட்டக்களப்பு தாளங்குடா கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது. வித்தியாதீபம் செய்தி மடலின் முதல் பிரதி கல்லூரியின் பீடாதிபதி கே.புண்ணியமூர்த்தியால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# இலக்கியப் புலத்தில் கலை நிலம்

– எஸ்.ரி.அருள்குமரன்

கலை இலக்கியப் புலத்தில் மலர் ஆக்கமுயற்சிகள் காத்திரமான வகிபங்கினை செலுத்துகின்றன. இந்தப் புலத்தில் பிரதேச செயலகங்களின் கலாசாரப் பிரிவுகளின் ஊடாக வெளியிடப்படுகின்ற மலர் ஆக்கமுயற்சிகள் சிறப்பானவையாகக் காணப்படுகின்றன. இதற்கான காரணங்களாக பிரதேசத்தில் காணப்படுகின்ற சிறப்புக்கள், மரபு சார்ந்த விடயங்கள், கலைசார் செயற்பாட்டாளர்கள் தொடர்பான பதிவுகள் போன்ற பல்வேறு விடயங்களை ஆவணப்படுத்துவதற்கும் பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான களம் அமைத்து கொடுப்பதற்கும் இத்தகைய மலர் வெளியீடுகள் துணைநிற்கின்றன. வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்பட்டு வருகின்ற கலை நிலம் மலர் அவற்றில் ஒன்று.



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் வெளிவந்துள்ள இந்த மலருக்கான இதழாசிரியர்களாக கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திரா, இணை இதழ் ஆசிரியராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான சு. ஸ்ரீகுமரன் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.



## வெளியிடப்பட்டது கனலி




யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையினரின் கனலி மாணவர் சஞ்சிகை பல்கலைக் கழக நூலக கேட்போர்கூடத்தில் துறை தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக யாழ். பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி சிரேஷ்ட பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக கலைப்பீட பீடாதிபதி கே.சுதாகரும் கலந்து கொண்டனர். சஞ்சிகையின் நயப்புரையினை தமிழ் துறை சிரேஷ்ட பேராசிரியர் கி.விசாகரூபன் வழங்கினார். நூல் மதிப்பீட்டுரையினை சமூகவியல் துறைத் தலைவர் எஸ். ராஜேஸ்கண்ணா வழங்கினார். மேலும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரை யாளர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் என பெரும்பாலானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# வாழைப்பழம் ஏலம்! ரூ. ஒரு கோடியே 60 லட்சத்துக்கு!

இத்தாலியைச் சேர்ந்த பிரபல கைவினைக் கலைஞர் மரிஷாயொ கேட்டலன் வித்தியாசமான கலைப் பொருள்களை உருவாக்குவதில் பெயர் பெற்றவர். 2016ஆம் ஆண்டு 18 கரட் தங்கத்தை வைத்து 1.25 மில்லியன் அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.20 கோடி) மதிப்பில் தங்கக் கழிப்பறையை உருவாக்கி உலகம் முழுவதும் பிரபலமானார்.



இந்தநிலையில், அமெரிக்காவின் மியாமி நகரில் நடந்து வரும் கலைப் பொருள்களுக்கான சர்வதேசக் கண்காட்சியில் மரிஷாயொ கேட்டலன் சாதாரண வாழைப் பழத்தை கலைப் படைப்பாக மாற்றினார். கண்காட்சி நடைபெற்ற அறையின் சுவரில் வாழைப்பழத்தை 'டேப்' கொண்டு ஒட்டினார். இந்தப் படைப்புக்கு 'காமெடியன்' என்று பெயர் சூட்டி உள்ளார். அவரது இந்தப் படைப்பு இலங்கை மதிப்பில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது. வாழைப்பழம் ஏலத்தில் எடுக்கப்பட்டாலும் மக்களின் பார்வைக்காகத் தொடர்ந்து அதே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியைப் பார்வை யிட வந்த அனைவரும் அதனுடன் 'செல்பி' எடுத்து மகிழ்ந்தனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கலைஞரான டேவிட் டதுனா இந்தக் கண்காட்சிக்கு வந்தார். அவர் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கேட்டலனின் கலைப் படைப்பான வாழைப் பழத்தை எடுத்து சாப்பிட்டார். இதை பார்த்து அங்கிருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். டேவிட் டதுனா, வாழைப்பழத்தை உண்பதை பார்த்து அங்கிருந்த பெண் ஊழியர் ஒருவர் கோபமடைந்தார். எனினும் டேவிட் டதுனா மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே இடத்தில் வேறொரு வாழைப்பழம் ஒட்டிவைக்கப்பட்டு, அதற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)



# தென்னாபிரிக்காவில் பிரபஞ்ச அழகி தெரிவு

நியூயோர்க், டிசெ. 11

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணம் அட்லாண்டா நகரில் 2019ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப் போட்டி நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 90 அழகிகள் கலந்து கொண்டனர். இவர்களில் தென்னாபிரிக்கா, மெக்சிகோ, கொலம்பியோ, பியூர்டோ ரிகோ மற்றும் தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த 5 அழகிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

இறுதியில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 26 வயதான மொடல் அழகி சோசிபினி துன்சி பிரபஞ்ச அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு கடந்த ஆண்டு பிரபஞ்ச அழகியாக தெரிவு செய்யப்பட்ட பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கேட்ரியோனா கிரோ மகுடம் சூட்டினார்.

2ஆவது இடத்தை பியூர்டோ ரிகோவின் மேடிசன் அண்டர்சன் பெற்றுக் கொண்டார். மெக்சிகோவை சேர்ந்த சோபியா 3ஆவது இடம் பிடித்தார். (ஒ.5)



# உலகின் இளம் பிரதமர்

ஹெல்சின்கி, டிசெ. 11

பின்லாந்தில் அண்மையில் நடந்த தபால் திணைக்கள வேலை நிறுத்தத்தை பிரதமர் அண்டி ரின்னி சரியாக கையாளவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த விவகாரத்தில் கூட்டணி கட்சிகளிடம் இருந்து எதிர்ப்புகள் வலுத்ததை அடுத்து, அவர் பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து, போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த, சமூக ஜனநாயக கட்சியை சேர்ந்த சன்னா மரின் (வயது-34) பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் அடுத்த வாரம் பிரதமராக பொறுப்பு ஏற்கிறார்.

தற்போது உலகில் உள்ள பிரதமர்களில் மிகவும் வயது குறைந்த பிரதமர் இவர்தான்.

இதற்கு முன்பு நியூசிலாந்தின் பெண் பிரதமரான ஜெசிந்தா (வயது-39) உலகின் இளம் பிரதமராக இருந்தார். (ஒ.5)



# கர்ப்பிணி மனைவி அமர முதுகை கொடுத்த கணவர்!

பீஜிங், டிசெ. 11

சீனாவின் ஹீலோங்ஜியாங் மாகாணத்தின் கேஹாங் நகரைச் சேர்ந்தவர், கர்ப்பிணியான மனைவியைப் பரிசோதனைக்குஅருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

மருத்துவரைப் பார்ப்பதற்கு கூட்டம் அதிகமாக இருந்தது. கதிரைகள் அனைத்தும் நிரம்பியிருந்தன. கணவன், மனைவி இருவரும் மருத்துவரின் அறைக்கு வெளியே நின்றனர்.

நீண்ட நேரம் நின்றதால் பெண்ணுக்கு கால் வலிக்கத் தொடங்கியது. அவருக்கு எழுந்து இடம்கொடுக்க எவரும் முன்வரவில்லை. மனைவி மிகவும் சோர்வாக இருக்கின்றமையைக் கவனித்த அவரது கணவர், உடனே தரையில் அமர்ந்து தன் முதுகில் மனைவியை அமர வைத்துக் கொண்டார்.

இதை அருகில் இருந்த ஒருவர் வீடியோ எடுத்தார். வீடியோவை கேஹாங் நகரப் பொலிஸார், இவர் ஒரு சிறந்த கணவர், இவரை அனைவரும் பின்பற்ற வேண்டும், என்ற தலைப்புடன் இணையதளத்தில் வெளி யிட்டனர். (ஒ.5)



# இன்றைய நாள்

**மேடம்:** அடுத்தவரை நம்பி முக்கியமான செயலை ஒப்படைக்க கூடாது. தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். குடும்ப செலவுக்கும் கூடுதல் பணம் தேவைப் படும்.

**இடபம்:** நண்பர், உறவினர்களிடம் நற்பெயர் கிடைக்கும். தொழில் வளர்ச்சி பணி இனிதாக நிறைவேறும். கூடுதல் லாப விகிதம் கிடைக்கும். எதிர் பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மிதுனம்:** உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை நன்மை தரும். தொழில் வளர்ச்சிபெற அக்கறையுடன் பணி புரிவீர்கள். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** செயல்களை மனப் பூர்வமாக நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார தொடர்பு பலம் பெறும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**சிம்மம்:** அவமதித்து பேசிய சிலர் அன்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். கூடுதல் பண வரவில் சேமிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை குடும்பத்தில் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு உதவும். சராசரி அளவில் பண வரவு கிடைக்கும்: பொருள்களை நிர்ப்பந்தத்தின் பேரில் வாங்கக் கூடாது.

**துலாம்:** வீண் பேச்சு பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பண வரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். பழகியவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் அதிகரிக்கும். வழக்கு, விவகாரத்தில் அனுகூலம் உருவாகும்.

**தனுசு:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பலமாக துணை நிற்கும். சிறு செயலையும் நேர்த்தியாக செய்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று மன நிறைவைத் தரும்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். மனதில் நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** குழப்பமான சிந்தனைகளை சரி செய்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். சுமாரான பண வரவு கிடைக்கும்.

**மீனம்:** உங்கள் மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். பல நாள் திட்டமிட்ட செயல் எளிதாக நிறைவேறும். தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் உண்டு.

## உறவுகள்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை விடுவிக்க வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

போரின் போதும், அதன் பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டாண்டுக்கும் மேலாகத் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோண மலை மாவட்டங்களில் வீதியோரம் கொட்டகை அமைத்துத் தங்கி அவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திவரும் நிலையில் அவர்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றும் அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தினர்.

சில இடங்களில் நேற்று மழை பெய்து கொண்டிருந்தபோதும், தங்கள் உறவுகளுக்காக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும், மதத் தலைவர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

“கடத்தாதே, கடத்தாதே எமது உறவுகளை இனியும் கடத்தாதே”, “சர்வதேசமே நீதியைப் பெற்றுத் தா”, “தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் ஹீரோக்கள்”, “சர்வதேசமே இலங்கை அரசைக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து”, “எங்கே எங்கே உறவுகள் எங்கே”, "இழப்பீட்டு அலுவலகம் எமக்கு தேவையில்லை", "ஓ.எம்.பி.வேண்டாம்" என்பன போன்ற பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களையும் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபைக்கான மனு ஒன்றை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்திடம் ஒப்படைத்தனர்.

வவுனியாவில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக கடந்த ஆயிரத்து 25 நாள்களாகப் போராடிவரும் காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முல்லைத்தீவில் இராஜப்பர் ஆலயத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை சென்றது.

தமது கோரிக்கைகள் அடங்கிய ஐக்கிய நாடுகள் சபைக்கான மனுவை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபனிடம் அவர்கள் கையளித்தனர்.

(எ-110,35,422)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 817
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 72,259,155/-
வெற்றி இலக்கங்கள்
25 53 64 69 N
அபிவிருத்தி லொத்தர் சபை
SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1089
சீட்டிழுப்பு திகதி 2019.12.09 திங்கட்கிழமை
H 07 11 57 66
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 85,844,748/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS. DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1628
சீட்டிழுப்பு திகதி 10.12.2019
வெற்றி இலக்கங்கள்
05 37 52 61 N
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.42, 316, 368 /=
ராசி
திகதி 10.12.2019
வெற்றி வாரம் 2703
வர்ணம் சிவப்பு
இடபம்
வெற்றி இலக்கங்கள்
09 14 50 56
புதன் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4,709,040/=
11.12.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## வடக்குக்கு...

அதுவரை பதவி வகித்த ஆளுநர்கள் அனைவரையும் பதவி விலகுமாறு பணிக்கப்பட்டிருந்தது. அவர்கள் பதவி விலகியதை அடுத்துப் புதிதாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் இதுவரை வடக்கு மாகாணத்துக்கு ஆளுநர் நியமிக்கப்படவில்லை.

வடக்குக்கு தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்று பல தரப்புக்களும் வலியுறுத்தியிருந்த நிலையில், வடக்கு ஆளுநருக்காகப் பலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. பலர் இந்தப் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டதை அடுத்து யாரைத் தெரிவு செய்வது என்பதில் அரசுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. பரிந்துரைக்கப்பட்டவர்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்தால் ஏனையோரைப் பரிந்துரைத்த தரப்புக்கள் அதிருப்தி அடையலாம் என்பதால் அரச தரப்பு வடக்கு ஆளுநர் நியம னத்தைப் பின்தள்ளிப் போட்டிருந்தது என்றும் அறிய முடிகின்றது.

இந்தச் சிக்கல்களால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒரு சிவில் அதிகாரியை வடக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இன்னும் சில நாள்களில் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தும் திட்டம் அரசுக்கு இல்லை என்று தெரியவருகின்றது. பொதுத் தேர்தலின் பின்னரே மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அரசு முடிவெடுக்க வுள்ளதால், அதுவரை தமது வேலைத் திட்டங்களைக் கொண்டு நகர்த்தக் கூடியவரை ஆளுநர் பதவியில் அமர்த்துவதையே அரசு விரும்புகின்றது என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

(எ)

## கமாலுக்கு...

புதிய ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பல விடயங்களை அந்த அமைப்பு உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு வலுவான ஆரம்ப கட்ட ஆதாரங்கள் உள்ளதைப் போன்று, கமால் குணரட்ணவுக்கு எதிராகவும் ஆதாரங்கள் உள்ளன என்று உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்படுபவர்களை இலங்கை உயர் பதவிகளில் நியமிப்பதன் ஊடாக வேண்டும் என்றே தண்டணையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை ஊக்குவிக்கின்றது. இலங்கையின் புதிய பாதுகாப்புச் செயலராக கமால் குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளமை சர்வதேசச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைத் தராதரங்களைப் பின்பற்றுவதாகத் தெரிவிக்கும் நாடுகளுக்கு நீதி நெறி தொடர்பான இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆவணத்தில் ஜோசப் முகாமுக்குப் பொறுப்பாக இருந்தபோது கமால் குணரட்ண மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

அந்த முகாமில் பாதிக்கப்பட்ட 10 பேரின் வாக்குமூலங்களையும் இந்த அமைப்புத் தனது ஆவணத்தில் இணைத்துள்ளது.

பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண எழுதிய நூலில் அவர் குறிப்பிட்ட விடயங்களையும் உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போரை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்துமாறு 2019ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தனக்கும், சவேந்திர சில்வாவுக்கும் உத்தரவிட்டார் என்று கமால் குணரட்ண தனது நூலில் குறிப்பிட்டுள்ளதையே உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது ஆவணத்தில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

(எ)

## வன்புணர்வு...

சந்தேகநபர்கள் இருவரது விளக்கமறியலை எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடித்தது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

வன்புணர்வுச் சம்பவம் கடந்த மாதம் 15ஆம் திகதி கோப்பாய் பகுதியில் நடந்தது. வீதி ஒன்றில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் அவரது நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, அந்த வீதியால் வந்த இருவர் அவர்களை அச்சுறுத்தி மிரட்டியுள்ளனர்.

மதுபோதையில் இருந்த அவர்கள் சிறுமியின் நண்பரைத் தாக்கியுள்ளனர். ஒருவர் நண்பரை மிரட்டித் தடுத்து வைத்திருக்க, அவர்களில் ஒருவர் சிறுமியை அச்சுறுத்தித் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று ஒதுக்குப்புறமான இடமொன்றில் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமி வீட்டில் தெரிவித்ததை அடுத்து கடந்த 23ஆம் திகதி சிறுமியின் தாயும், சிறுமியின் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளனர். சிறுமியும் நண்பரை விசாரணை செய்த பொலிஸார், இருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர். அவர்கள் கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் “பி” அறிக்கை தாக்கல் செய்தனர். சந்தேக நபர்கள் இருவரையும் அடையாள அணிவகுப்பு உட்படுத்தவும் விண்ணப்பம் செய்தனர். அவற்றை ஆராய்ந்த நீதிமன்றம் சந்தேகநபர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைத்தது.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஏ.பீற்றர் போலிடம் முற்படுத்தப்பட்டனர். அடையாள அணிவகுப்பு நடத்த நீதிமன்று உத்தரவிட்டது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்பில் முற்படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது நண்பர் ஆகியோர் தனித் தனியே சந்தேகநபர்களை அடையாளம் காண அழைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் எந்தவிதத் தயக்கமும் இன்றிச் சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட் டினர். அதன்பின்னர் சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது நீதிமன்றம்.(ஏ-37)

## இடியன்...

யாதவர்கள் இவர் மீது இடியன் துப்பாக்கியால் சூடு நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அதில் அவர் காலில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இளைஞன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி3)

## சுமந்திரனுக்கு...

பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையேயான கூட்டம் நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அதில் ஆராயப்படவிருந்த நிலையில், அதில் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் கூட்டத்துக்கு எம்.ஏ.சுமந்திரன் செல்லவில்லை. தற்போது கொழும்பில் உள்ள அவர் வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கூட்டத்துக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

## மேலதிக..

ராகப் பணியாற்றும் க.கனகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக செயலாளராகவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிகச் செயலராகப் பணியாற்றும் ம.பிரதீபன் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றல்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது மேலதிக மாவட்டச் செயலாளர்கள் இருவர் இடமாற்றப்பட்டுள்ளனா. (எ-105)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.11
இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி வெற்றி பெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வரும் லீக் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 24:04 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி பெற்றது.

காலை 8.30 மணிக்கு இடம் பெற்ற பெண்களுக்கான லீக் முறையிலான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை அணியை எதிர்த்து வேலணை மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் பருத் தித்துறை மெதடிஸ்த பெண் கள் உயர் தர பாடசாலை அணி 47:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற் றது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற லீக் ஆட்டத்தில் கொக் குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 44:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

யாழ்ப்பாணம், டிசெ.11
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நேற்றுமுன்தினம் கொலின்ஸ் விளையாட்டுக் கழக பழைய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கொலின்ஸ் கொங்கிரஸ் அணிக்கும், கொலின்ஸ் வொரியஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்ததால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

மற்றுமொரு ஆட்டத்தில் கொலின்ஸ் ரைடர்ஸ் அணிக்கும், கொலின்ஸ் யுனைரெட் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொலின்ஸ் யுனைரெட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

### இரட்டையர் பிரிவு பூப்பந்தாட்டத்தில்

# றெமின்சன், தூசாந்தன் இணை மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், டிசெ.11
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடத்திய திறந்த பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில் லோ. றெமின்சன், தி.தூசாந்தன் இணை கிண்ணம் வென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற திறந்த பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப் பாண மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி விளையாடிய லோ.றெமின்சன், தி.தூசாந்தன் இணையை எதிர்த்து மன்னார் மாவட்டத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய சி.திலக்சன், நி.நிசாந்தபாலன் இணை மோதினர்.

இதில் யாழ்ப்பாண மாவட்டத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய லோ.றெமின் சன், தி.தூசாந்தன் இணை 21:15, 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.11
கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் கொலின்ஸ் விளையாட்டுக் கழக பழைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் ரைடர்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் கொங்கிரஸ் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் வொரியஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் யுனைரெட் அணி மோதவுள்ளது. (23)

### இலங்கை வீரர்களுக்கு நேபாளத்தில் டெங்கு தாக்கம்

## சுகததாச விளையாட்டரங்கில் குவிந்திருந்த குப்பைகள்

*பார்வையிட்டார் விளையாட்டுத்துறை அமைச்சர்*

கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கு ஹோட்டல் சுற்றுச் சூழலை விளையாட்டுத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று பார் வையிட்டார்.

நேபாளத்தில் நடைபெற்ற 13ஆவது தெற்காசிய விளையாட்டு விழா வில் கலந்து கொண்ட இலங்கை வீரர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அவர்கள் நேபாளம் புறப்படுவதற்கு முன்னர் சுகத தாச விளையாட்டரங்க ஹோட்டல் களில் தங்கியிருந்துள்ளனர். இத னால் அவர்கள் டெங்கு நுளம்பின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்க லாம் என்ற சந்தேகத்தின் பேரில் அமைச்சர் இந்த கண்காணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தி ருந்தார்.

டெங்கு தாக்கமானது நேபாளத் தில் இல்லை எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள் இலங்கையிலிருந்த போதுதான் வீரர்கள் பாதிக்கப்பட்டி ருக்க கூடும் எனவும் நம்புகின்றனர். எவ்வாறெனினும் அமைச்சரின் இந்த கண்காணிப்பின்போது பெருமளவான கழிவுகளும், பிளாஸ்டிக் போத்தல்களும் மீட்கப் பட்டன.



## ஆஷிகாவுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்.டிசெ.11
13ஆவது தெற்காசியப் போட்டியில் வெள்ளிப் பதக் கத்தை வென்ற இளம் வீராங்கனை ஆஷிகாவுக்கு மதிப்பளித்தல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற 13ஆவது தெற்காசிய நாடு களுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் 64 கிலோ எடைப் பிரிவில் சினெச்முறையில் 70 கிலோ பளுவையும் கிளின் அன் ஜக் முறையில் இலங்கைக் கான புதிய சாதனையைப் பதிவு செய்து 100 கிலோ பளுவையும் ஒட்டுமொத்த மாக 170 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத் தைச் சுவீகரித்தார்.

இவரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து வேம்படி மகளிர் கல்லூரி வீதியூடாக யாழ்ப் பாணம் துரையப்பா விளை யாட்டு மைதானம் வரை அழைத்துச் செல்லப்பட்டு யாழ். துரையப்பா விளை யாட்டரங்கில் மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வு யாழ். மாவட்ட பளு தூக்கும் விளையாட்டு கழ கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (422)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

**மரண அறிவித்தல்**

**காளிமுத்து ஜெய்சங்கர்**



தோற்றம் 08.02.1966 மறைவு 09.12.2019

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அராலி வீதி ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காளிமுத்து ஜெய்சங்கர் (சங்கர் மோட்டர்ஸ் உரிமையாளர், Bajaj Dealer) 09.12.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காளிமுத்து சந்தானலெட்சுமியின் அன்பு மகனும் பரமலிங்கம் விஜயகுமாரியின் அன்பு மருமகனும் கீதாவின் அன்புக் கணவரும் ஜெய்பவான், வினித்தா, வசீகரன், டர்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரதீபனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

# இந்தியா - மே.இ.தீவுகள் தொடரை வெல்வது யார்?

தொடரைக் கைப்பற்றும் நோக்கில் இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மும்பை வான்கடே மைதானத்தில் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் மூன்று ரி-20 போட்டித் தொடரில் இரண்டு போட்டிகள் நடைபெற்று முடிந்த நிலையில் இருஅணிகளும்தலாஒவ்வொருவெற்றியுடன் 1:1 என்ற நிலையில் சமநிலையில் காணப்படுகின்றன.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்று பெரும் எதிர்பார்ப்புடன் இடம்பெறவுள்ளது.

கடந்த போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுத்து விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணி தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.பொல்லார்ட் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணியும் எல்லா வகையிலும் கடும் சவாலாக இருக்கும். ஏனெனில் போட்டி வான்கடே மைதானத்தில் இடம்பெறுவதால் பொல்லார்ட் ஐ.பி.எல். போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக அந்த மைதானத்தில் விளையாடி பரீட்சையமாவுள்ளதால் இந்திய அணிக்கு அது பெரும் சவாலாக காணப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ரோகித் கடந்த இரு போட்டிகளிலும் சொதப்பியிருந்தார். எனினும் இன்று சொந்த மண்ணில் விளையாடுவதால் அவர் மீதான எதிர்பார்ப்பு கொஞ்சம் அதிகமாகவே உள்ளது.

புதுமுக வீரர் ஷிவம் டுபே கடந்த போட்டியில் 3ஆவது வீரராக களம் இறங்கி தனது வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டார். விராட் கோக்லி, லோகேஷ் ராகுல், ரிஷப் பந்த ஆகியோரும் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர்களுக்கு பஞ்சமில்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான லெண்டில் சிம்மன்ஸ், லிவிஸ் அணிக்கு பெரும் பலம். ஹெட்மையர், நிக்கோலஸ் பூரன், பொல்லார்ட் என அவர்களின் அதிரடியாட்டம் தொடரும். அவர்கள் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பார்கள்.பந்து வீச்சைப் பொறுத்த வரையில் காட்ரெல், வில்லியம்ஸ், ஹைடன் வால்ஷ், ஹோர்ல்டர் அணிக்கு பக்கபலம்.

HOTLINE 0777 17 35 17



DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0054

IT மற்றும் ஆங்கிலம்
இரட்டை டிப்ளோமா

TVEC APPROVED CENTRE

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

IT Courses
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

NVQ COURSES
ICT -Full Time (Level 4 )
CAA -Full/Part Time

IT & ENGLISH
DUAL DIPLOMA

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12
IELTS Life Skills- A1,B1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
*DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) நெல்லியடி 021 226 2470 | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775 | No.130,கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970 | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665 | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி 021 228 5655 |

## கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) - பரந்தன்
## கிளை அங்கத்தவர்களின் கவனத்துக்கு

மேற்படி சங்கத்தின் 30.11.2019 ஆம் திகதியுடன் முடிவடைந்த எமது சங்கக் கீழ்க்குறிப்பிட்ட கிளைகளுக்கான வாக்களிக்கத் தகுதியுடையோரது பெயர்ப்பட்டியல்கள் அவ்வவ் கிளைகளிலும். தலைமை அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பட்டியலில் பெயர் வித்தியாசங்கள். வேறு தவறுகள் காணப்பட்டு அவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பின் தங்களது வதிவிடம் மற்றும் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 04.12.2019 ஆம் திகதி தொடக்கம் 26.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் **" செயலாளர் கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பரந்தன்"** என்னும் முகவரியுடன் எழுத்து மூலம் தொடர்பு கொண்டு திருத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


| | |
|---|---|
| 01. பரந்தன் | - பரந்தன் கிளை |
| 02. இரணைமடு மேற்கு | - இரணைமடு மேற்கு கிளை. பொதுநோக்கு மண்டபம் |
| 03. முரசுமோட்டை | - ஊரியான் கிளை (கோப்சிற்றி) |
| 04. ஊரியான் | - ஊரியான் கிளை (கோப்சிற்றி) |
| 05. கண்டாவளை | - கண்டாவளை கிளை |
| 06. புளியம்பொக்கணை | - புளியம்பொக்கணை சந்தியிலுள்ள கிளை |
| 07. கலவெட்டிதிடல் | - கலவெட்டிதிடல் கிளை |
| 08. புன்னைநீராவி | - புன்னைநீராவி கிளை. உழவனூர் கிளை |
| 09. தருமபுரம் | - தருமபுரம் கிளை |
| 10. பிரமந்தனாறு | - கண்ணகி நகர்க்கிளை. கல்லாறுகிளை |
| 11. பொறிக்கடவை | - பரந்தன் கிளை |
| 12. கல்மடு நகர் | - கல்மடு நகர் கிளை |
| 13. உமையாள்புரம் | - பரந்தன் கிளை |
| 14. குமரபுரம் | - பரந்தன் கிளை |
| 15. தட்டுவன்கொட்டி | - தட்டுவன்கொட்டி கிளை. கண்ணகிநகர் கிளை |
| 16. ஆனையிறவு | - பரந்தன் கிளை |

**அங்கத்தவர் பட்டியலை தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.**

செயலாளர்,
கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



CS29848(16/17)

### நடராசா கதிர்காமநாதன் (வசாவிளான்)

வசாவிளானை பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கதிர்காமநாதன் (முன்னாள் ஆசிரியர்) கடந்த **(08.12.2019)** ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் தனது **73**ஆவது வயதில் காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காயத்திரி, கஜந்தினி, கமலினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான தவமணி, செல்வபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ஆறுமுகத்தின் மைத்துனரும் பிரதீபனின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**

(பிரித்தானியா) புவனேந்திரன்
079 123 51153
(பிரான்ஸ்) விமலேந்திரன்
0033 6277 97356

அ.கந்தசாமி (திருநெல்வேலி)
077 280 2632,
தம்பிஐயா ஆறுமுகம் (சில்லாலை)
077 055 7516

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



### கந்தசாமி குகனேஸ்வரன் (குகா)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி - குகனேஸ்வரன் (குகா - புங்குடுதீவு தபால் ஊழியர்) நேற்று (10.12.2019) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி- குணலட்சுமி தம்பதியின் அன்பு மகனும் சத்தியசீலன்- திருணாதேவி தம்பதியின் அன்பு மருமகனும், பிரவீணாவின் (ஆசிரியை, சில்லைப்பிட்டி முன்பள்ளி) பாசமிகு கணவரும், டனுசியனின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரன், இராஜேஸ்வரி (முகாமையாளர், புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.ச.) காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.12.2019) புதன்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் முனையப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS28431(16/17)

தகவல்:
4ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
குடும்பத்தினர்

## சிமித் விவகாரம்;
# இயன் சப்பலுக்கு ஜஸ்டின் லாங்கர் பதிலடி

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் போது ஸ்டீவ் சிமித் அணித் தலைவர் டிம் பெய்ன் களத்தில் இருக்கும் போதே கள வியூகம் அமைத்தது குறித்து சிமித் 'ஒயிட் ஆன்ட்டிங்' செய்கிறார் என்று சிமித்துக்கு எதிராக மிகவும் கடுமையான விமர்சனத்தை முன் வைத்தார் இயன் சப்பல்.



ஒயிட் ஆன்ட்டிங் என்பது ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் ஓர் இழி சொற்பதம் ஆகும். இதன் அர்த்தம் பொதுவாக ஒரு குழுவில் இருந்து கொண்டே அந்தக் குழுவுக்கு எதிராகவே சதி செய்பவர் அதாவது கரையான் போன்று உள்ளாக எந்த ஒன்றையும் அரித்து புறத்தில் தான் அரித்த தன் சுவடு தெரியாமல் இருப்பது. ஆஸ்திரேலியாவில் மிகவும் இழுக்கான, ஒருவரை சிறுமைப்படுத்த பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும் இது. இன்னொரு விதத்தில் பெய்னுக்கு சிமித் குழி தோண்டப் பார்க்கிறார் என்றும் கொள்ளலாம். இவ்வாறு முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் இயன் சப்பல் சிமித்தை நோக்கி இழி சொல் பயன்படுத்தியதற்கு ஆஸ்திரேலியப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தனது கண்டனத்தை தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜஸ்டின் லாங்கர் தெரிவிக்கையில்;

உண்மையில் இயன் சப்பல் கூறிய கருத்து எனக்கு விசித்திரமாக இருந்தது. அனைத்து அணித் தலைவர்களையும் போல் அணியில் உள்ள அனுபவ முன்னாள் அணித் தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதில் என்ன தவறு.

அவர் இதை ஏன் இப்படி விமர்சிக்க வேண்டும்? அணியில் உள்ள அனைவருமே அணியின் தலைவர் போல் சிந்திக்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள்வலியுறுத்திவருகிறோம். எனவே பெய்ன் இவர்களுடன் கலந்தாலோசிக்காமல் இருந்தால் அது முட்டாள்தனமானது. அனைத்து வீரர்களும் தலைமைத்துவ தாக்கத்தை களத்தில் ஏற்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறோம் - என்றார்.

**VACANCY**

யாழில் இயங்கும் பிரபல CCTV நிலையத்திற்கு கணக்கீடு மற்றும் கணினி தொடர்பான பரீட்சாத்திய முடைய **பெண் ஊழியர் தேவை.**

உங்கள் சுயவிபரக்கோவையை கீழ்க்காணும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Email- vconitpark@gmail.com
Closing Date- 12.12.2019
Hotline- 021 221 1818,077 376 7899

# இலங்கை - பாகிஸ்தான் டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட போட்டித் தொடரில் விளையாடவுள்ளது. இலங்கை அணி நீண்ட காலங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அணி கடந்த மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடி தோல்வியைச் சந்தித்தது. எனினும் அங்கு இடம்பெற்ற ரி-20 தொடரை இலங்கை அணி கைப்பற்றி வரலாறு படைத்தமையும் குறிப்பிடத்தக்கது. முதலாவது சுற்றுப் பயணத்தின் போது மூத்த வீரர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. அதனால் அனுபவம் வாய்ந்த டெஸ்ட் தொடரை வெல்ல முடியாமல் போனதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால் இந்த சுற்றுப் பயணத்தின் போது அனுபவம் வாய்ந்த மூத்த வீரர்கள் அணியில் இடம்பிடித்துள்ளதால் போட்டி விறுவிறுப்பாக இருக்கும்.

இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் திமுத் கருணாரத்னவின் தலைமையில் களமிறங்குகின்றது. துடுப்பாட்டத்தில் சந்திமல், மத்தியூஸ், டிக்வெல, தனஞ்செய, ஒளசத பெர்னாண்டோ போன்ற அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் அணிக்குப் பலம். பந்து வீச்சில் விஸ்வ பெர்னாண்டோ, லக்மல், குமார.ரஜித அணிக்கு மேலும் பலம்.

அசார் அலி தலைமையில் களமிறங்கும் பாகிஸ்தான் அணி சொந்த மண் என்பதால் சிறிது மிடுக்குடன் களமிறங்கும். அத்தோடு கடந்த முறை ரி-20 போட்டிக்கு பழி தீர்க்கும் முகமாகவும் விளையாட அவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம். எனவே அவர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள். துடுப்பாட்டத்தில் பாபர் அசாம், ஹ்றிஸ் சோகில், ரிஷ்வான்,மசூட் அணியின் தூண்களாகக் காணப்படுகின்றனர். பாகிஸ்தான் அணிக்குப் பலமே அந்த அணியின் பந்து வீச்சுத்தான். ஷான் அப்ரிடி, இம்ரான் கான், மொகமட் அபஸ், சின்வாரி என சிறப்பான பந்து வீச்சாளர்கள் அணியில் உள்ளனர்.

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராணி கணேசமணி

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி கணேசமணி கடந்த 07.12.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சிவயோகம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், கணேசமணியின் பாசமிகு மனைவியும், சஞ்ஜீவன், யதீஷா, பார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிரிசானந்தின் பாசமிகு மாமியாரும், மகாலிங்கசிவம் (சுவிஸ்), உமாபதிசிவம் ( பிரான்ஸ்), ரஞ்சனி (கனடா), சுகநாதசிவம் (பிரான்ஸ்), சோதிசிவம் (டென்மார்க்), பொற்கிளி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகநாயகி, ஜெயலட்சுமி மற்றும் செல்வரட்ணம், திவ்வியராணி, தனேஸ்வரி, செவ்வேள் ஆகியோரின் மைத்துனியும், சிவகலை, சாந்தினி, கணேசரட்ணம், சிவசக்தி ஆகியோரின் மைத்துனியும், சீவரட்ணம், ஆனந்தராசதுரை, புவனேஸ்வரி, குகதாஸ் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், தர்சன், தர்சிகா, தனுசா ஆகியோரின் சிறிய தாயாரும், ரிசாயினி, விதுரன், பிரியா, [illegible], திவ்யா, அனுசா ஆகியோரின் பெரிய தாயாரும், கார்த்தீபன், கிரிஷன், கிரிஷிகா, நாதிரா கோபிலக்சன், வதனலக்சன், மிதுசன், விதுரன், ரஞ்சிதா, பாமினி, தினோஜா, செந்தூரன், கோபிகா, நிலக்ஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் 31/3, இரண்டாம் ஒழுங்கை, இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (12.12.2019) வியாழக்கிழமை 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- கணவர், பிள்ளைகள், மருமகன், சகோதரர்கள்.**

(CS/29838)(11.17)

**கணவர் - 077 713 5343, மகன் - 07[illegible] 957 1111**

உ



# புதுக்கடைத்திறப்புவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விஹாரி வருடம்
கார்த்திகை 25 ஆம் நாள் புதன்கிழமை
(11.12.2019) முற்பகல் 10.50 - நண்பகல் 11.55
மணிவரையுள்ள கார்த்திகை நட்சத்திரமும்
அமிர்தசித்த யோகமும்
கூடிய சுபவேளையில் எம்மால்
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட

## சிவ்றா பெஷன் மஹால்

எனும் வியாபாரஸ்தாபனத்தை
இறைவன் திருவருள் துணை கொண்டு
ஆரம்பிக்கவுள்ளதால்
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

எம்.கீ[illegible], எஸ்.சிறிகரன் (சுவிஸ்),
[illegible] சிறிகாந் (லண்டன்)
No.223, [illegible]wer House Road, Jaffna.
[illegible]l: 076 569 6008



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.